கடவுள்துணை.

இஃது

தஞ்சைமாநகரம் - ஹிஸ் ஹைநெஸ் சத்ரபதி

சர்போஜீ மஹாராஜா அவர்கள்

அரண்மனைத்தன்வந்திரிமாலில்

அநுபவமுறையாய் எழுதிவைத்திருந்த

# வைத்தியராஜ

# பாலவாகடம்.

இஃது

தஞ்சைமாநகரம்

கிருஷ்ணசாமிவைத்தியர் குமாரர்

வைத்தியசோதிடநூற்பண்டிதர்

நாராயணசாமிவைத்தியரவர்களால்

பரிசோதிக்கப்பட்டு,

கலியாணமால்

கோபாலபிள்ளை அவர்களால்

சென்னை

இந்து யூனியன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1895.

All Right Reserved.

இதன் விலை அணா-அ.] [வி. பி. மூலமாய் அணா-க்க.

# விளம்பரம்.



இந்த வைத்தியராஜ பாலவாகடமும், வைத்தியராஜசிந்தாமணி முதல் பாகமும், அதன் இரண்டாம்பாகமும் வேண்டியவர்கள் தஞ்சாவூர் கோட்டைக்குள் வடக்குவீதி 118-நெ.வீட்டிலிருக்கும் கலியாணமால்-கோபால பிள்ளை யவர்களிடத்தில் கைவிலைக்கும், வாலியுபேயபல் போஸ்ட் மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தப் புத்தகங்களின் டைடில் பேஜில், அச்சிட்டவரும் சொந்தக்காரருமாகிய என் பெயர் எழுதப்பட்டிருக்கின்றது. அவ்விதம் பேர் இல்லாத புஸ்தகங்களைக் கொண்டுவந்து கொடுத்தாலும் அல்லது அவ்விதமான புஸ்தகங்களை விற்குமவர்களைக் காண்பித்தாலும் அவர்களுக்குத் தக்க இனம் கொடுக்கப்படும்.

கலியாணமால்,

கோபாலபிள்ளை.

# விளம்பரம்.

இதனால் சகல்ருக்கும் தெரிவிப்பது யாதெனில் கஅசுஎஞ (உடு-வது) ஆக்ட்டின் (உ0-வது) பிரிவினில் (சு-வது) விதியின் பிரகாரம் இங்கிலீஷ் இலாகாவாகிய மத்ராஸில் காபிரயிட், ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கின்றது.

இன்னும் பிரென்சு இலாகாவாகிய புதுச்சேரியிலும் காரைக்காலிலும் காபிரயிட் ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிறது.

ஆகையால் இந்த வைத்தியராஜபாலவாகடத்தையாவது அல்லது இதை வேறுபாஷையில், மொழிபெயர்த்தாவது அல்லது இதில் கண்டிருக் கிற பாகங்களையாவது அல்லது இதில்ஏதேனும் பாகத்தையாவது, இந்நூலை அச்சிட்டவரும் சொந்தக்காரருமாகிய கலியாணமால் - கோபாலபிள்ளை உத்திரவின்றி யொருவரும் அச்சிடலாகாது. அப்படி அச்சிட்டால் மேற் கண்ட ஆக்ட்டில் சொல்லியிருக்கிறபடி கோர்ட்டின் மூலமாய் அதனலுண் டாகும் நஷ்டத்தைக்கட்டி வாங்கப்படும்.

கலியாணமால்,

கோபாலபிள்ளை.

# சிறப்புக்கவிகள்



தஞ்சைமாநகரம் சதாவதானம்

## ம-ரா-ரா-ஸ்ரீ சுப்பிரமணிய ஐயரவர்கள்

இயற்றிய

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீர்பூத்தபுடவிமகள் வதனமென்னத்
திகழ்ந்துபொலிதரு தஞ்சையாண்டமன்னர்
தேர்பூத்தவுயிர்க்குமிடி நோய்போன்மெய்யிற்
சேர்நோயுந்தீர்த்திடுவான் சேர்த்துவைத்த
பார்பூத்தபயனுதவு வயித்யராஜ
பாலவாகடநூலைப் பரிசோதித்தான்
பேர்பூத்தவயித்தியஞ்சோ திடநூற்றேர்ச்சிப்
பெரும்புகழ்நாராயணசாமிப் பேரோனே.

---

அஷ்டாவதானம்

## பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றியது.

### எண்சீர்விருத்தம்.

திருத்தஞ்சை மாநகரிற் செங்கோ லோச்சித்
திகழ்ந்தகா வலர்மன்கு திரட்டி வைத்த
பருத்தமருத் துவநூலுள் வைத்ய ராஜ
பாலவா கடமதனைப் பண்பிற் றேர்ந்து
திருத்தமுறச் சோதித்திங் கெவர்க்கு நல்கித்
தேர்ந்தசீர்த் தியைவாய்ந்து சிறந்திட்டாலால்
பொருத்தமிகு ஜோசியத்தும் புலமை யுற்ற
புகழ்நாராயணசாமிப் புனிதன்றானே.

---

# பதிப்புரை.



காவிரியொழுகுங் கவின்வளஞ்சான்ற சோழ நன்னாட்டிற் றொல் நிதிக்கிழவன் அளகாபுரியென வணிதிகழ் பெருஞ்சீர்த் தஞ் சைமாநகரிற் றனியரசளித்த சத்ரபதி ஹிஸ் ஹைநெஸ் சரபோஜி மஹாராஜா அவர்கள் தம் அரண்மனையின் தன்வந்திரி மஹாலில் மன்னுயிர் தமக்குத் துன்னுறுநோயெலாங் களைந்திடற் பொருட்டுக் கருணைகூர்ந்து தக்க வைத்ய சாஸ்திர பண்டிதர் பலரைக்கொண்டு சமஸ்கிருதம், மஹாராஷ்டிரம், தமிழ், தெலுங்கு, ஹிந்துஸ்தானி முதலிய பல பாஷைகளிலுள்ள அநேக வைத்திய புத்தகங்களைச் சேகரித்து அவற்றின் முறைமைப்படி மிக்க திரவியச்செலவிட்டு ஔஷதங்கள் செய்வித்துக் கையாண்ட முறைகளுள் மலட்டுநோய் ஒழிக்கும் வழியையும் பாலர்க்குண்டாகும் பிணிகளின் குணங்களையும் அவ்வவற்றிற்குத்தக்க ஔஷதங்கள் செய்யும் முறைகளையும் அநுபவசித்தமாய்க்கண்டு அவ்விஷயங்களைப் பல சாஸ்திரங்களினின்றுங் கோடுகரித்தெடுத்து அவற்றைத்தக்க இலக்கிய இலக்கணத் தேர்ச்சியுள்ள தமிழ்ப்புலவர்களாற் செய்யுளுருவமாய்ச் செய்வித்து வைத்தியராஜ பாலவாகடம் எனப்பெயர் கொடுத்தியற்றுவித்த இவ்வருமையாகிய நூல் ஷ மகாராஜா அவர்கள் அரண்மனை தன்வந்திரி மஹாலில் ஏட்டுப் பிரதியாயிருந்து பற்பல விதமாய்ச் சிதைவுற்றுச் சிதறுண்டு கிடந்தது. இதனை முற்றுமொன்றுபடத் திரட்டி, காலவித்தியாசங்களினுலும் மற்ற ஏதுக்களினுலும் நேரிட்டிருந்த பலவித பிழைகளைக் களைந்து சுத்தபிரதியாக்கி தந்தவரான வைத்திய சோதிஷபண்டிதர் - நாராயணசாமி வைத்தியரவர்களுக்கும் இதனையச்சிடும்போது அதிலுள்ள பிழைமுதலியவைகளைத் திருத்தி ஆங்காங்கு தலையுரைப் பேர் முதலியவைகளை யேர்ப்படுத்தி லோகோபகாரார்த்தமாய் முயற்சி யெடுத்துக்கொண்டவரான அக்கீம். பா. முகம்மது அப்துல்லாசாயபு அவர்களுக்கும் நான் இருதயபூர்வமாய்

நன்றியுள்ளவனுய் இருக்கின்றேன். இதனுல் பிரயோசனமடைபவர்களும் மற்றவர்களும் மேற்கண்டவர்களுக்கு என்றென்றும் நன்றியறிந்தவர்களாக இருக்கும்படியாய் மிகவும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இவ்வருமையான நூலை கற்றோர்க்கும் மற்றோர்க்கும் வைத்தியர்களுக்கும் வைத்தியரல்லாதவர்களுக்கும் தாய்மார்களுக்கும் பாலர்களுக்கும் பிரையோசனப்படும்படி அச்சிட்டு வெளிப்படுத்தத்துணிந்தேன். இப்புத்தகம் மலட்டுநோயாளர் புத்தென்னும் நரகத்தைக் கடப்பதற்குக் கருவியெனவும் மக்கட்பேறுடையோர் ஒவ்வொருவர் வீட்டிலும் இப்புத்தகத்தில் ஒவ்வொன்றிருக்குமாயின் மக்கட்குண்டாகும் நோய்களால் உண்டாகும் மனநோய் உண்டாகாதிருக்குமெனவும்நம்புகின்றேன்.

**கலியாணமால் - கோபாலபிள்ளை.**

---

# வைத்தியராஜபாலவாகட்

## அட்டவணை.


| | | பக்கம். |
|---|---|---|
| **அ** | | |
| அக்கரகணரோகலட்சணம் | ... | உசு |
| ஷை வியாதிக்கு மருந்து | ... | ,, |
| அசரிப்புழுரோகலட்சணம் | ... | நந |
| ஷை வியாதிக்கு மருந்து | ... | ,, |
| அந்தகண்ரோகலட்சணம் | ... | உள |
| ஷை வியாதிக்கு மருந்து | ... | ,, |
| அரிகரப்பான்ரோகலட்சணம் | ... | கந |
| ஷை வியாதிக்கு மருந்து | ... | ,, |
| அலகைக்காண்டம் | ... | நசு |
| அலத்திடிசன்னிரோகலட்சணம் | ... | நச |
| ஷை வியாதிக்கு மருந்து | ... | ,, |
| **ஆ** | | |
| ஆமகணரோகலட்சணம் | ... | உசு |
| ஷை வியாதிக்கு மருந்து | ... | உள |
| ஆமரோகலட்சணம் | ... | ந0 |
| ஷை வியாதிக்கு மருந்து | ... | ,, |
| ஆருவதுநாள் (குழந்தைபிறந்த) | ... | ச0 |
| ஆருவதுமாதம் (ஆண்குழந்தைபிறந்த) | ... | நள |
| ஆருவது மாதம் (கொர்ப்பவதி) | ... | சள |
| ஆருவதுமாதம் (பெண்குழந்தைபிறந்த) | ... | ரு0 |
| ஆருவதுவருஷம் | ... | ருஉ |
| **இ** | | |
| இரண்டாவதுநாள் (குழந்தைபிறந்த) | ... | நகூ |
| இரண்டாவதுநாழிகை (ஷை) | ... | நஅ |
| இரண்டாவதுமாதம் (ஆண்குழந்தைபிறந்த) | ... | நசூ |
| இரண்டாவதுமாதம் (கொர்ப்பவதி) | ... | சசூ |
| இரண்டாவதுமாதம் (பெண்குழந்தைபிறந்த) | ... | சகூ |
| இரண்டாவது வருஷம் | ... | ருக |
| இருபதாவதுநாள் (குழந்தைபிறந்த) | ... | சச |
| இருபத்தாறுவதுநாள் (ஷை) | ... | சரு |
| இருபத்திநான்காவதுநாள் (ஷை) | ... | ,, |
| இருபத்திமூன்றுவதுநாள் (ஷை) | ... | ,, |
| இருபத்திரண்டாவதுநாள் (ஷை) | ... | ,, |
| இருபத்தெட்டாவதுநாள் (ஷை) | ... | சசூ |
| இருபத்தேழாவதுநாள் (ஷை) | ... | ,, |

| | | பக்கம். |
|---|---|---|
| இருபத்தைந்தாவதுநாள் (குழந்தைபிறந்த) | ... | சடு |
| இருபத்தொன்பதாவதுநாள் (ஷை) | ... | சசு |
| இருபத்தொன்றுவதுநாள் (ஷை) | ... | சச |
| இளம்பிள்ளைவாதரோகலட்சணம் | ... | நடு |
| ஷை வியாதிக்கு மருந்து | ... | ,, |
| **உ** | | |
| உப்புமாந்தரோகலட்சணம் | ... | உக |
| ஷை வியாதிக்குமருந்து | ... | ,, |
| **ஊ** | | |
| ஊதுகாமாலைரோகலட்சணம் | ... | நஉ |
| ஷை வியாதிக்குமருந்து | ... | ,, |
| ஊதுமாந்தரோகலட்சணம் | ... | கஅ |
| ஷைவியாதிக்குமருந்து | ... | ,, |
| **எ** | | |
| எட்டாவதுநாள் (குழந்தைபிறந்த) | ... | சo |
| எட்டாவதுமாதம் (ஆண்குழந்தைபிறந்த) | ... | சஅ |
| எட்டாவதுமாதம் (கெர்ப்பவதி) | ... | நஅ |
| எட்டாவதுமாதம் (பெண்குழந்தைபிறந்த) | ... | நo |
| எட்டாவதுவருஷம் | ... | நங |
| எரிகணரோகலட்சணம் | ... | உங |
| ஷை வியாதிக்குமருந்து | ... | உச |
| **ஏ** | | |
| ஏழாவதுநாள் (குழந்தைபிறந்த) | ... | சo |
| ஏழாவதுமாதம் (ஆண்குழந்தைபிறந்த) | ... | சஅ |
| ஏழாவதுமாதம் (கெர்ப்பவதி) | ... | நஎ |
| ஏழாவதுமாதம் (பெண்குழந்தைபிறந்த) | ... | நo |
| ஏழாவதுவருஷம் | ... | நஉ |
| **ஐ** | | |
| ஐந்தாவதுநாள் (குழந்தைபிறந்த) | ... | சo |
| ஐந்தாவதுமாதம் (ஆண்குழந்தைபிறந்த) | ... | சஎ |
| ஐந்தாவதுமாதம் (கெர்ப்பவதி) | ... | நஎ |
| ஐந்தாவதுமாதம் (பெண்குழந்தைபிறந்த) | ... | நo |
| ஐந்தாவதுவருஷம் | ... | நஉ |
| **ஒ** | | |
| ஒன்பதாவதுநாள் (குழந்தைபிறந்த) | ... | சo |
| ஒன்பதாவதுமாதம் (ஆண்குழந்தைபிறந்த) | ... | சஅ |
| ஒன்பதாவதுமாதம் (கெர்ப்பவதி) | ... | நஅ |
| ஒன்பதாவதுமாதம் (பெண்குழந்தைபிறந்த) | ... | நo |
| ஒன்பதாவதுவருஷம் | ... | நங |
| **ஓ** | | |
| ஓங்கரப்பான்ரோகலட்சணம் | ... | கச |
| ஷை வியாதிக்குமருந்து | ... | கடு |

| | பக்கம். |
|---|---|
| **க** | |
| கக்குவரோகலட்சணம் ... | நச |
| ஷ வியாதிக்கும்மருந்து ... | ,, |
| கக்குவான்வரலாறு ... | சூ |
| கட்மொந்தரோகலட்சணம் ... | கஅ |
| ஷ வியாதிக்குமருந்து ... | ,, |
| கணமாந்தரோகலட்சணம் ... | உக |
| ஷ வியாதிக்குமருந்து ... | ,, |
| கணம்வரலாறு ... | அ |
| கணரோகப்பொதுலட்சணம் ... | உஉ |
| ஷ வியாதிக்குமருந்து ... | உஉ |
| கரப்பான்வரலாறு ... | அ |
| கருங்கிரந்திரோகலட்சணம் ... | க0 |
| ஷ வியாதிக்குமருந்து ... | கக |
| கருப்போற்பத்திக்காண்டம் ... | சூ |
| கல்மாந்தரோகலட்சணம் ... | கசூ |
| ஷ வியாதிக்குமருந்து ... | கசூ |
| **கி** | |
| கிரந்திகரப்பான்ரோகலட்சணம் ... | கக |
| ஷ வியாதிக்குமருந்து ... | ,, |
| **கீ** | |
| கீரிப்பூச்சுவரலாறு ... | சூ |
| **கு** | |
| குளிர்சன்னிவாதரோகலட்சணம் ... | நச |
| ஷ வியாதிக்குமருந்து ... | ,, |
| குன்றியக்கரணரோகலட்சணம் ... | உசூ |
| ஷ வியாதிக்குமருந்து ... | ,, |
| **சு** | |
| சங்கதோஷம்வரலாறு ... | க0 |
| சட்டைகரப்பான்ரோகலட்சணம் ... | கடு |
| ஷ வியாதிக்குமருந்து ... | ,, |
| சந்நிமாந்தரோகலட்சணம் ... | உ0 |
| ஷ வியாதிக்குமருந்து ... | ,, |
| சன்னியாமரோகலட்சணம் ... | நக |
| ஷ வியாதிக்குமருந்து ... | நஉ |
| **சூ** | |
| சூதக்கட்டேற்பத்திவரலாறு ... | சூ |
| **சு** | |
| சுரகணரோகலட்சணம் ... | உஅ |
| ஷ வியாதிக்குமருந்து ... | ,, |
| சுரமாந்தரோகலட்சணம் ... | உக |
| ஷ வியாதிக்குமருந்து ... | ,, |
| சுரம்வரலாறு ... | சூ |

| | | பக்கம். |
|---|---|---|
| சுரவாமரோகலட்சணம் | ... | நக |
| ஷை வியாதிக்குமருந்து | ... | ,, |
| சுழிகணரோகலட்சணம் | ... | உச |
| ஷை வியாதிக்குமருந்து | ... | ,, |
| சுழிகணம்வரலாறு | ... | அ |
| **சூ** | | |
| சூலுவயிற்றுக்கீரிப்பூச்சுரோகலட்சணம் | ... | நஙு |
| ஷை வியாதிக்குமருந்து | ... | ,, |
| **செ** | | |
| செங்கரப்பான்ரோகலட்சணம் | ... | கச |
| ஷை வியாதிக்கு மருந்து | ... | ,, |
| செங்கிரந்திரோகலட்சணம் | ... | கo |
| ஷை வியாதிக்குமருந்து | ... | ,, |
| செரியாமாந்தரோகலட்சணம் | ... | கஎ |
| ஷை வியாதிக்குமருந்து | ... | ,, |
| செவ்வாப்புக்கட்டிரோகலட்சணம் | ... | கக |
| ஷை வியாதிக்குமருந்து | ... | ,, |
| **சே** | | |
| சேற்றுமகரப்பான்ரோகலட்சணம் | ... | கஉ |
| ஷை வியாதிக்குமருந்து | ... | ,, |
| **த** | | |
| தலைமாந்தரோகலட்சணம் | ... | கசு |
| ஷை வியாதிக்கு மருந்து | ... | ,, |
| **தா** | | |
| தாய்க்குக்காயமருந்து | ... | நசு |
| **தோ** | | |
| தொலைமாந்தரோகலட்சணம் | ... | உo |
| ஷை வியாதிக்குமருந்து | ... | ,, |
| **தோ** | | |
| தோஷகரப்பான்ரோகலட்சணம் | ... | கஉ |
| ஷை வியாதிக்கு மருந்து | ... | கஙு |
| **ந** | | |
| நடகாயம் | ... | சஉ |
| **நா** | | |
| நாலாவதுநாள் (குழந்தைபிறந்த) | ... | நசு |
| நான்காவதுமாதம் (ஆண்குழந்தைபிறந்த) | ... | சஎ |
| நான்காவதுமாதம் (கொர்ப்பவதி) | ... | நஎ |
| நான்காவதுமாதம் (பெண்குழந்தைபிறந்த) | ... | சசு |
| நான்காவதுவருஷம் | ... | ருஉ |
| **நீ** | | |
| நீராமரோகலட்சணம் | ... | நo |
| ஷை வியாதிக்குமருந்து | ... | நக |
| நீர்க்கணரோகலட்சணம் | ... | உஉ |

| | | பக்கம். |
|---|---|---|
| நீர்க்கணரோகவியாதிக்குமருந்து | ... | நஉ |
| நீர்மாந்தரோகலட்சணம் | ... | கள |
| ஷை வியாதிக்குமருந்து | ... | ,, |
| **நோ** | | |
| நோய்நிவர்த்திகாண்டம் | ... | க0 |
| நோய்வரலாறுகாண்டம் | ... | எ |
| **ப** | | |
| பட்சிதோஷம்வரலாறு | ... | க0 |
| பதிமூன்றுவதுநாள் (குழந்தைபிறந்த) | ... | சக |
| பதிமூன்றுவதுவருஷம் | ... | ருந |
| பதிலைவதுநாள் (குழந்தைபிறந்த) | ... | சக |
| பதிஞறுவதுநாள் (குழந்தைபிறந்த) | ... | சஉ |
| பதினெட்டாவதுநாள் (குழந்தைபிறந்த) | ... | சச |
| பதினேழாவதுநாள் (குழந்தைபிறந்த) | ... | ,, |
| பதினேந்தாவதுநாள் (குழந்தைபிறந்த) | ... | சஉ |
| பதிஞறுவதுநாள் (குழந்தைபிறந்த) | ... | சக |
| பதிஞறுவதுமாதம் (ஆண்குழந்தைபிறந்த) | ... | சஅ |
| பதிஞறுவதுமாதம் (பெண்குழந்தைபிறந்த) | ... | ருக |
| பதிஞறுவதுவருஷம் | ... | ருந |
| பத்தாவதுநாள் (குழந்தைபிறந்த) | ... | சக |
| பத்தாவதுமாதம் (ஆண்குழந்தைபிறந்த) | ... | சஅ |
| பத்தாவதுமாதம் (கெர்ப்பவதி) | ... | நஅ |
| பத்தாவதுமாதம் (பெண்குழந்தைபிறந்த) | ... | ரு0 |
| பத்தாவதுவருஷம் | ... | ருந |
| பத்தொன்பதாவதுநாள் (குழந்தைபிறந்த) | ... | சச |
| பன்னிரண்டாவதுநாள் (குழந்தைபிறந்த) | ... | சக |
| பன்னிரண்டாவதுமாதம் (ஆண்குழந்தைபிறந்த) | ... | சகூ |
| பன்னிரண்டாவதுமாதம் (பெண்குழந்தைபிறந்த) | ... | ருக |
| பன்னிரண்டாவதுவருஷம் | ... | ருந |
| **பா.** | | |
| பால்மாந்தரோகலட்சணம் | ... | கஅ |
| ஷை வியாதிக்குமருந்து | ... | ,, |
| **பி** | | |
| பித்தகரப்பான் ரோகலட்சணம் | ... | கஉ |
| ஷை வியாதிக்குமருந்து | ... | ,, |
| **பே** | | |
| பேய்மாந்தரோகலட்சணம் | ... | உ0 |
| ஷை வியாதிக்குமருந்து | ... | ,, |
| பேராமரோகலட்சணம் | ... | நக |
| ஷை வியாதிக்குமருந்து | ... | ,, |
| **பொ** | | |
| பொதுக்காண்டம் | ... | உ |
| பொறிகரப்பான்ரோகலட்சணம் | ... | கந |

| | | பக்கம். |
|---|---|---|
| பொறிகரப்பான்வியாதிக்குமருந்து | ... | கங |
| **போ** | | |
| போர்மாந்தரோகலட்சணம் | ... | கசு |
| ஷை வியாதிக்குமருந்து | ... | ,, |
| **ம** | | |
| மகவிலாக்காண்டம் | ... | ங |
| மஞ்சட்காமாலைரோகலட்சணம் | ... | ஙஉ |
| ஷை வியாதிக்குமருந்து | ... | ,, |
| மஞ்சட்காமாலைவரலாறு | ... | சு |
| மண்டைகரப்பான்ரோகலட்சணம் | ... | கச |
| ஷை வியாதிக்குமருந்து | ... | ,, |
| மதுராசுரரோகலட்சணம் | ... | ஙங |
| ஷை வியாதிக்குமருந்து | ... | ,, |
| மந்தாரகணரோகலட்சணம் | ... | உஎ |
| ஷை வியாதிக்குமருந்து | ... | ,, |
| மலப்போக்குவரலாறு | ... | சு |
| **மா** | | |
| மாந்தம்வரலாறு | ... | அ |
| மாந்தரோகலட்சணம் | ... | கசு |
| ஷை வியாதிக்கு ம்ருந்து | ... | ,, |
| **மு** | | |
| மூக்குசணரோகலட்சணம் | ... | உடு |
| ஷை வியாதிக்கு மருந்து | ... | ,, |
| முதலாவதுநாழிகை (குழந்தைபிறந்த) | ... | ஙஅ |
| முதலாவதுநாள் (குழந்தைபிறந்த) | ... | ஙசு |
| முதலாவதுமாதம் (ஆண்குழந்தைபிறந்த) | ... | சசு |
| முதலாவதுமாதம் (கெர்ப்பவதி) | ... | ஙசு |
| முதலாவதுமாதம் (பெண்குழந்தைபிறந்த) | ... | சசு |
| முதலாவதுவருஷம் | ... | டுக |
| **மூ** | | |
| மூலகணரோகலட்சணம் | ... | உடு |
| ஷை வியாதிக்கு மருந்து | ... | ,, |
| மூன்றுவதுநாள் (குழந்தைபிறந்த) | ... | ஙசு |
| மூன்றுவதுமாதம் (ஆண்குழந்தைபிறந்த) | ... | சஎ |
| மூன்றுவதுமாதம் (கெர்ப்பவதி) | ... | ஙஎ |
| மூன்றுவதுமாதம் (பெண்குழந்தைபிறந்த) | ... | சசு |
| மூன்றுவதுவருஷம் | ... | டுக |
| **வ** | | |
| வலிப்புமாந்த ரோகலட்சணம் | ... | கசு |
| ஷை வியாதிக்கு மருந்து | ... | ,, |
| வறட்கண ரோகலட்சணம் | ... | உங |
| ஷை வியாதிக்கு மருந்து | ... | ,, |
| வற்மாந்த ரோகலட்சணம் | ... | கஎ |

| | பக்கம். |
|---|---|
| வறள்மாந்தவியாதிக்குமருந்து ... | கள |
| வா | |
| வாதகரப்பான் ரோகலட்சணம் ... | கக |
| ஷை வியாதிக்கு மருந்து ... | கஉ |
| வாலகரப்பான் ரோகலட்சணம் ... | கங |
| ஷை வியாதிக்கு மருந்து ... | கச |
| வி | |
| விஷகண ரோகலட்சணம் ... | உசு |
| ஷை வியாதிக்கு மருந்து ... | ,, |
| விஷமாந்த ரோகலட்சணம் ... | கசு |
| ஷை வியாதிக்கு மருந்து ... | ,, |
| வெ | |
| வெடிகரப்பான் ரோகலட்சணம் ... | கரி |
| ஷை வியாதிக்கு மருந்து ... | ,, |
| வை | |
| வைத்தியர்கட்கு புத்திகூறல் ... | ஙo |


## வைத்தியராஜபாலவாகட அட்டவணை

## மூற்றிற்று.





ஹிஸ்ஹைநெஸ்
சீவாஜிமஹாராஜா.



ஹிஸ்ஹைநெஸ்
சரபோஜிமஹாராஜா.



ஹெர்ஹைநெஸ் மாயிஜிராஜா.



உ

கடவுள் துணை.

# வைத்தியராஜ

## பாலவாகடமூலம்.

### விநாயகர் துதி.

ஞாலமீமிசைநண்ணிமல்கிய
பாலவாகடம்பகருதற்கொரு
மூலகாரணமுதன்மைபெற்றொளிர்
சீலவாரணத்தாள்கள்சேர்துமே.

### சுப்பிரமணியர் துதி.

கூறிலாததாயியலுநோயெலாம்
பாறுமாறுசெய்பாலவாகடங்
கூறுவின்னருட்கொண்டலாகிய
வாறுமாமுகனடிகளேற்றுவாம்.

## திருமால்துதி.

வையகத்தினிலேவாலவாகடந்
தெய்யசெந்தமிழாற்சொலநாடொறுஞ்
செய்துகாத்தழிக்குந்திருநாயகன்
செய்யதாமரைச்சேவடிசூட்டுவாம்.

பாலாழிநடுவுள்வைகும்பைந்துழாய்மார்பனந்தப்
பாலாழிநடுவுட்டோன்றும்பங்கயச்செல்விகேட்பப்
பாலாழிகடைந்தெனன்னப்பல்கலைகடைந்துசொற்றப்
பாலாழியமுதம்போலும்பாலவாகடமிதாமே.

---

## பொதுக்காண்டம்.

சீர்நிறைந்தகருணையின்றேவனே
பார்நிறைந்தவுதரம்படைத்தவா
ஏர்நிறைந்தமெய்யன்பரிறைவனே
கூர்நிறைந்தசொல்லொன்றதுகூறுவாய். (க)

கூறும்வையகந்தன்னிற்குழவிக
ளூறுநற்கருவின்றியொழிந்ததும்
ஏறுபோலச்சினிப்பதுமீறிலா
வேறுவேறுவியாதிவிளைவதேன். (உ)

விளைந்தபேய்கள்புட்டோஷங்கள்மெய்யிலே
இளந்தையர்க்குவருவதுமெப்படி
வளர்ந்தவாதபித்தங்கள்பற்றுவண்மை
வுளந்தெரித்தருளுத்தமநண்பனே. (ங)

உத்தமத்திலுயர்ந்தசெவ்வாய்மின்னே
ந்த்திநீயும்விளுவுதனன்றெளுப்
பத்தியாகமனதுபதித்துநின்
தித்தமென்மொழிதன்னிடஞ்சேர்த்திடே. (ச)

சேர்த்திடென்றுசிரித்துமகிழ்ந்தரி
வார்த்தையிங்கிதமாகவிளம்புவார்
பார்த்திடிந்தப்படிவஞ்சுருங்கினூன்
கூர்த்திருக்கிற்குழவிகளில்லைகேள். (ஞ)

கேள்சுரோணி தஞ்சுக்கிலங்கூடியே
நாளதைந் திற்பனித் துளிபோன்னண்ண
ஆளும்பாலினின்மோர்விழுந்தாலென
நீள்வயிற்றினினின்றதுமுண்மையே. (சு)

உண்டதால்வருங்கர்ப்பத்தினானந்தான்
கண்டதால்வரும்புள்ளலகைக்குணம்
பண்டுதாயையடைந்ததுபாரினில்
விண்டபிள்ளையேமெயதுகேண்மினே. (எ)

மின்னினுண்ணிடைமென்கொடிவஞ்சியே
முன்னும்வாதபித்தங்கபமூன்றிற்குஞ்
சென்னிவாய்வதுசேர்ந்துபலவிதம்
மன்னியோங்கிவளர்ந்திடுமெய்யிலே. (அ)

மெய்யதாய்நின்றவேதமுதற்பொரு
ளையனேயறிவின்மயளாகையாற்
செய்யவெங்கதிர்தோன்றத்திரண்டிரு
ணையவோடுவபோலுரைநண்பனே. (கூ)

நண்பனேகுழந்தைப்பிணிநாடியே
திண்புவிக்குள்விளைந்ததுஞ்செய்வதும்
பண்புடைத்தவிழ்த்தம்பலசாந்தியும்
மண்புகழ்ந்திடவாய்மலர்வாயென்றுள். (கo)

என்றபோதிலிதயங்களித்துவேல்
வென்றகூர்விழிமெல்லியலேமன்னம்
நின்றுகேளெனவேதநியமமே
யொன்றுமாறுமகிழ்ந்தவரோதுவார். (கக)

பொதுக்காண்டம் முற்றும்.

---

## மகவிலாக்காண்டம்.

ஓதியமாமகவில்லதுநீதியுரைத்திடுவேன்றிருவே
தாதுகுமல்குலிலேமலருண்டதுதானிடையேபுரளில்
நீதியதாய்விழுமாவமுதம்புகுநின்றிடமங்கொருவும்
வேதமுமிப்படியேயுரையாடிடுமென்கொடிநீயறியே. (க)

நீயறிமாமலர்தான தில்வாய்வுரினேயமதாமமுதந்
தாயகமாகியமாபலனற்றதின்சாரமெலாமொழுகிச்
சீயெனநீரெனவேயதுபோய்வளர்தேகமெலாம்வலியா
யோயும்விதங்களிதாகுமறிந்துகொளொண்டொடியின்புறவே. (உ)

இன்புறுமாமலர்தன்னிலுமேதசையேகமதாய்வளர
அன்புறுமப்பொழுதேவிழுமாவமுதஞ்சளிபோலுருகி
வன்படியாதுறையாதுகலங்கிவழிந்திடுமேவெளியில்
மென்பதநூலிடைகஞ்சமதாமுலைமென்குழன்மெல்லியலே. (ஊ)

மெல்லிதழ்ப்பூவினில்வல்வலியுட்டின்மென்மேலுண்டாகில்
நல்லிதமாய்விழுமென்னமுதந்தணலுடியவெண்ணெயதாம்
கொல்லதினின்றுமிகுந்துவெதும்பிக்கோமுகமாம்வழியே
செல்லமுரித்துறைபோய்விடுமாமறைச்சூத்திரமிப்படியே. (எ)

இப்படிப்பூவினிற்சீதளமேயுறினின்பமதாம்வேலைச்
செப்பியமாவமுதம்விழுநின்றுதெளிந்துமுறிந்துடனே
அப்புவெனப்பழுதாகிநனைந்தயலோடியழிந்துவிடும்
மைப்படியுங்குழற்செப்பிளமென்முலைவல்லிநன்வாணுதலே. (ஏ)

வாணனியோனியிலேமலர்மீதினின்மாபுழுவங்குறிலோ
ஊணியமாவமுதந்தனையேயெடுத்துண்டுகளித்துமிக
ஆணவமாகநிலத்துவளர்ந்திடுமோகையினுன்மகவைக்
காணிலையென்றுகரைந்திடுவோரிதுகண்டறிகாரிகையே. (ஐ)

காரிகையின்குறிமாமலர்மேன்மிகுகாற்றெனுஞ்சங்கையுறில்
வீரியமேவிழும்போதினிலேயதுவீழ்வதின்முன்பாகச்
சாரமெலாங்கொடுபோய்விடுமேயிதுசத்தியமேயுரைத்தோம்
வாரணிகொங்கைநல்லாயிதைநீயறிமாமறைநூன்முறையே. (ஒ)

நூலிடையாள்குறியாழமதாகவுநூல்கொழுநன்குறிதான்
சீலமுடன்சரிநீளமிலாவிடிற்றேய்வதிலுலமுதம்
பாலெனவேயுறையாமலுடம்பிற்பறந்துகலந்துவிடும்
வேலெனுமைவிழியாயிதுகண்டறிவேதன்விதிப்படியே. (ஓ)

வேதன்விதித்தவிலிங்கமுநீளமிகுந்திடில்வேதனையா
லோதியமாவமுதம்விழவெய்துமுனியிருந்திடுதாக்
கேதுவிலாமலுடைந்துமென்மேலிலெழும்பிநலிந்துவிடும்
மாதனமென்குழலின்பவளஞ்செறிவாயுடைமங்கையரே. (ஔ)

மங்கையராயினுமாடவராயினுமாவினையாலவிழ்தஞ்
சங்கையிலாமலருந்தியதாலுடல்தங்கியவெப்பமதாற்
பொங்கியமாவமுதஞ்சலமாகிமிருந்துபொழிந்துவிடும்
இங்கிதுநீதியறிந்திடுவேதமிசைத்ததிளங்கொடியே. (கo)

இளங்கொடியேயிதனுன்மகவில்லையிதற்குமருந்துகளும்
வளஞ்செறிதந்திரமேந்திரமந்திரமும்பிரமன்விதியும்
உளங்களிகொண்டிடுபூருவபுண்யமுமொக்கவியற்றியுறில்
விளங்கியபிள்ளைகளாகும்விதத்தைவிளம்புவன்மேலினியே. (கக)

மேலினிமங்கையர்மாதவிடாயெனவிலகியலாநாள்
வாலிபவாடவர்கூடியபோதினின்மங்கைவிலாவதுதான்
வேலிடுபுண்ணெனவேவலியுண்டெனின்மென்பகமாமலருங்
கோலமிலாதுபுரண்டதுவென்றறிகூறுவவைவுடதமே. (கஉ)

கூறுபருத்தியினுற்றபருப்பொடுகோதறுபெண்கோழி
வீறியபித்துமிரண்டுமெனைத்தனைமேவியபஞ்சூட்டி
யூறியயோனியிலேசெலவைத்தொருநாண்முழுதுஞ்சென்று
மாறியுமாறிமுக்காலும்புணர்ந்திடமைந்தருமுண்டாமே. (கங)

உண்டாமேதிரண்டுரிருநாளினிலொண்கணவன்புணரத்
தண்டார்தேகமெலாம்வலியென்னிற்றங்கியபகமலரிற
பண்டார்வாயுவுறைந்ததுவென்றறிபகர்வேன்சிகிட்சையது
கொண்டதிராட்சக்கனியிருநிட்கங்கூட்டியகல்லெணெயே. (கச)

எண்ணெயிற்கூட்டியரைத்ததுபஞ்சினிலேற்றியவல்குலிலே
நிண்ணயமாமுக்காலம்வைத்தாலதுநீங்கிமோர்பதிலே
கண்ணவலிக்குமெனின்மலர்தானதிற்கண்டதுசீதளமென்
றெண்ணிமருந்துகள்செய்திடுசெப்புவனேர்குழலேந்திழையே. (கரு)

ஏந்தியகாக்கரட்டான்மலர்கோஷ்டமிசைந்தகருஞ்சீரி
பாந்தமதாஞ்சிற்றரத்தையுஞ்சாரியெடைபகரெண்ணெயதிலே
நீந்தவரைத்ததுபஞ்சியிலூட்டிநிகழல்குலில்வைத்துச்
சேர்ந்திடவேயுறசீதளமோய்ந்திடுந்தேர்ந்தறிதேன்மொழியே. (கரு)

தேன்மொழியைப்புணர்போதினிலேதுடைசோர்ந்துவலிக்குமெனின்
மான்மலர்தானதிலூட்டினமென்றறிமாட்டுவிலாவென்புங்
கானுறைகாக்கரட்டான்மலர்நல்லெணெய்கண்டுகொண்மூவகையுந்
தான்மிகவேயரைபஞ்சினிலூட்டிசொச்திடுவல்குலிலே. (கஎ)

சாத்திடவுட்டினநீங்கிடுமாதிடைதான்வலிகாணுமெனிற்
காத்திரவல்குலிலேதசையென்றறிகளிரடிபின்னகமும்
தேத்தியசீரகமாவினன்னெய்யிவைசேர்த்தரைமூவகையும்
நேத்தியதாகவேபஞ்சினிலூட்டிநிதம்பத்துள்வைத்திடுவாய். (கஅ)

வைத்திடவேதசைதீர்ந்திடுமாதரைமருவியபோதினிலே
சித்தமகிழ்ச்சிகொளாமலுமேமயல்தீர்க்கிலையென்றுசொலில்
வித்தகவல்குலிலேபுழுவென்றறிமேவுசவுட்டுமெணீர்
முத்தியமிசிரிபருத்தியின்வித்தெடுமோதுகடுக்காயே. (கசு)

காயிவையாவுமரைத்திடுபஞ்சிற்கட்டிடுபொட்டணமாய்
பாயுறுமல்குலில்வைக்கப்பூச்சிபறந்திடுமெய்ம்மையதே
நாயகியோடுறவாகையிற்குதிகானரம்பிழுத்திடுமென்றும்
நீயதுற்சங்கைகளாமதுவென்றறிசேயரிவிழுமாதே. (உ0)

மாதுநல்லாயிதுமந்திரஜெபதபம்வைக்கத்தீர்ந்துவிடு
மோதியமருந்துகள்பொட்டணஞ்செய்தனதயோனியில்வைபகலில்
நீதியோடிரவினின்மூன்றுதரம்புணர்ந்திகழுந்தினமூன்று
தேதிநடந்திடில்விந்துபலித்திடுஞ்செகத்தினிலுள்ளோர்க்கே. (உக)

செகத்தினிலிவ்வகைபற்பலவிதமாஞ்சேயரிவிழுமாதே
யிகத்தினிற்பூருவபுண்ணியவியாலெய்திடுங்குழவிகடாம்
வகைத்திறம்பாமற்சனனவுற்பத்திவழியினைநன்முகத்
தொகுத்துரைசெய்வேனுயுள்வேதச்சூட்சியிப்படியாமே. (உஉ)

---

## கருப்போற்பத்திகாண்டம்.

### வேறு.

ஆடுங்கருமாசுக்கிலமதிலேசுரோணிதமும்
போகஞ்செயவேயொன்றியபோதேமகவாகும்
பாகந்தனேயேயிங்கிதமாகும்படிபகர்வேன்
நாகந்தனமாகெண்டையங்நயனஞ்செறிமின்னே. (க)

மின்னேசுக்கிலமும்பலமாகின்மெய்யாணும்
பின்னுஞ்சுரோணிதமேபலமாகிலதுபெண்ணும்
உன்னும்மிவ்விரண்டும்பலமாகிலிதுவுருவாய்
பன்னுங்கருவிரண்டாமெனவறிபாருலகத்தோத்தே. (உ)

ஒத்தாமனல்வெளிவாய்வி துவொன்றும்பருவத்திற்
சுத்தாகியவமுதம்விழவாணுமதுதப்பில்
வித்தாகியமண்ணப்பொடுமேவிலதுபெண்ணும்
அத்தாமரைமின்னேயிவ்வைங்தொத்திடிலலியே. (ஈ)

அலியேயாகுஞ்சுழிமுனேயதிலேசரமோடில்
வலநாசியிலோடும்பொழுதாணன்மகவாணுஞ்
சிலவேளையிலிடமோடும்போதேசிறுபெண்ணுங்
குலமாதோடுங்கூடும்போதிக்குறிகொள்ளே. (சு)

கொள்ளும்பனித்துளிசுக்கிலங்கூடிக்கருவாகித்
துள்ளுஞ்சுரோணிதமேயதிற்ரேய்ந்தேமிகவளருங்
கள்ளொன்றியகுழலாய்கருமுன்னூருந்தினத்தில்
விள்ளும்படியுருவாய்வெளித்தோன்றும்வித்திசெயலே. (ரு)

செயலாம்வித்தகளுலுமுன்னஞ்செய்நல்வினையாலும்
நயமாகியமகவானதுநனிசீருடன்வளமாய்
இயலாய்வருமதுதப்பிடிலெண்ணில்பலநோய்கள்
கயலார்விழியணங்கேநிதங்காக்குங்கருமுதலே. (சு)

---

## நோய்வரலாறுகாண்டம்.



கருவுற்றிடுநாள்முதற்கன்னியர்
மருவுங்கர்ப்பத்தில்வந்திடுநோயொடும்
பிரிவதானஜனனத்தின்பின்பிலும்
விரிவதாய்வரும்வியாதிவிளம்புவாம். (க)

விளங்குந்திங்களுமூன்றினில்வெவ்வியே
களங்கமானகறிசுவையுண்டியால்
தளங்குமென்கிருகன்றிவெதும்பியே
தளர்ந்தரத்தமதாய்விழுந்தய்யலே. (உ)

தையலேயெள்ளுசர்க்கரைகொள்ளுநீர்
துய்யகொப்பளைமுள்ளங்கிசோர்விலா.
வெய்யவச்சிரவல்லிமிகுந்ததோர்
செய்யகோழிக்கறியிவைதீண்டிலே. (ஈ)

நீண்டொழுகிவைதீங்குகருவிற்குப்
பூண்டகாவிமண்சாம்பர்புசித்திடிற்
பாண்டுபித்தமதாய்ப்பகர்கர்ப்பத்தின்
மூண்டெழும்பிடும்பிள்ளைமூலைக்கவே. (அ)

**மாந்தம் வராலாறு.**

மூலைத்தபின்னன்னைகொள்ளமுதிர்ந்தநோய்
வளர்த்தபிள்ளையைச்சூழ்ந்துமலிந்திடுங்
கிளைத்தசர்க்கரைவள்ளிக்கிழங்குடன்
தெளித்தமாங்கனிதெங்குபலாவிற்கே. (ஆ)

பலமதாங்கட்டுப்பால்சுரைபீர்க்கங்காய்
அலரும்வாழையவரைதுவரையுங்
கிலமதாக்கிடுங்கீரைத்தண்டின்கறி
குலவுமாங்கடலைதனைக்கொள்ளவே. (சு)

கொள்ளவேசெம்புலித்தகர்கோழிமீ
னெள்ளற்பன்றிக்கறிபல்லிறைச்சியு
மூள்ளுக்கன்னைநிதநிதமுண்டக்காற்
பிள்ளைக்குப்பலமாந்தம்பெருகுமே. (எ)

**கரப்பான் வராலாறு.**

பெருகுஞ்சோளமிறுங்கும்பெருங்கம்பு
வரகுகாருடன்வாழையின்காயொடு
உரைகொள்பாகற்கெளிற்றுமீனுண்டிடில்
விரிவதாய்க்கரப்பானுமிகுந்ததே. (அ)

**சுழிகணம் வராலாறு.**

மிகுந்தவாளைவிராட்டுமீன்கெண்டைமீன்
தகுந்தகோழிசிகப்புத்தகர்பலா
மகிழ்ந்ததெங்கொடுமாங்காயருந்திடிற்
சுகந்தமாகச்சுழிகணந்தோன்றுமே. (கூ)

**கணம் வராலாறு.**

தோன்றுமய்யபதார்த்தந்தோயப்பகை
யூன்றுதாகம்பசிமிகுந்துற்றிடில்
என்றதுன்பமெலாம்வந்துசூழ்தலால்
ஆன்றசேய்க்குக்கணங்களுமாகுமே. (கo)

### சுரம் வரலாறு.

ஆகும்ஈவலரம்பைக்கனியொடு
மேகுமேதித்தயிருடனீருள்ளி
பாகமாவெள்ளரிப்பழமுண்டாக்காற்
றேகமெங்குஞ்சுரங்கள்சென்னிக்குமே. (௪௪)

### மலப்போக்கு வரலாறு.

சென்னிக்கும்பேதிகளாம்வகைசெப்பக்கேள்
இனித்தபாற்கட்டருந்திடவீனமாய்க்
கனத்தமந்தங்களாகுதல்கஞ்சியூண்
மூனைத்தவாயுமிகுந்திடின்முற்றுமே. (௪௯)

### சீதக்கட்டுற்பத்தி வரலாறு.

முற்றுகின்றபழத்தின்விதையொடு
பற்றலாகுநெய்பாற்கஞ்சிசாதமுஞ்
சிற்றிலைக்கறிதெங்குடன்வாழைக்காய்
வெற்றியாமமிகுந்துவளருமே. (௫௦)

### மஞ்சட்காமாலை வரலாறு.

வளருங்கர்ப்பத்தின்மாதைப்புணருதல்
அளருந்தண்ணீரிலாடியருந்துதல்
வீளையுவேதத்தராய்மிகுந்துண்டிடிற்
றளையுங்கண்மஞ்சட்காமாலையுற்றிடும். (௫௧)

### கீரிப்பூச்சியுற்பத்தி வரலாறு.

உற்றதோர்மலங்கட்டுதலுண்மையாய்க்
குற்றிலைக்கறிநித்தமுங்கூட்டுதற்
பெற்றதாயொடும்பிள்ளையோடாயினுஞ்
சிற்றுயிர்க்கீரிப்பூச்சியுஞ்சேருமே. (௫௨)

### சுக்குவான் வரலாறு.

சேருங்காய்கனிசெய்பழஞ்சோறுபால்
மோருடன்றயிர்மொய்புளிப்புண்டியாற்
சாருமேபலநீரினிற்றூனத்தாற்
காருங்கோழையின்சுக்குவானென்பதே. (௫௩)

### சங்கதோஷ வரலாறு.

என்புதண்ணைமிதித்திடலேவல்வீட்
டின்புறத்துறலெட்சையைப்பார்த்திடற்
பம்புமீமமிதித்தல்பசாசின்மா
தன்புசேரிலலகையுமிஞ்சுமே. (கஎ)

### பட்சிதோஷம் வரலாறு.

மிஞ்சியேயந்திவேளையிற்பட்சிகள்
அஞ்சியோடுமையத்தைப்பார்த்திட
லஞ்சிராவழிவாடிநடந்திடல்
துஞ்சல்முற்றினுந்தோஷங்கள்சேருமே. (கஅ)

சேருகின்றகரிவகைசேர்த்திட
தூருகின்றவியாதிபுட்டோஷங்கள்
ஆருந்தாயையடித்ததுபிள்ளைக்கே
சாருநோய்க்குணஞ்சாற்றுவன்பாரிலே. (கஙு)

---

## நோய்நிவர்த்திகாண்டம்.

### சேங்கிரந்தி ரோகலட்சணம்.

பார்சனித்தவுடனேகுழந்தைகுறலின்றிபார்வையொளிவேறதாய்
சாரும்மிடறுகட்டியேமலசலங்களின்றிவளர்தன்னுடற்
சீரிதாகவசைவற்றிருக்கிலிதுசெங்கிரந்தியெனவுன்னியே
சோர்விலாதபரிகாரமானதைத்தொடுத்துரைத்திடுவனன்னமே. (க)

### ஷை வியாதிக்கு மருந்து.

அன்னமேபருமூருக்குகுன்றியிலையானவள்ளிகருப்பூரிலை
என்னுமூவகைச்சாரும்வேறுமூலைப்பாலுமொன்றுபடவேகலந்
துன்னுமாதிகோரோசனைப்பொடியுகந்துரைத்துளருந்திடப்
பின்னுநீரிற்செம்மூள்ளிபெய்யெரிபிள்ளையின்னுடலில்வார்த்திடே. (உ)

### கருங்கிரந்தி ரோகலட்சணம்.

வார்த்தையுங்குளரிமெத்தவேயழுதுவம்புமாமூலையருந்திடா
தூர்த்தமாகவயிறூதிமேனியும்வெதும்பியேயுடன்முருக்கினின்
றூர்த்தமாய்விழிவிழித்திடாமலுமயற்சிமெய்கருப்பாகிறற்
பூர்த்தியாகியகருங்கிரந்தியெனவேமருந்துகள்புகட்டிடே. (ஙு)

## ஷ வியாதிக்த மருந்து.

புகட்டுநெய்யுடனெண்ணெயோடுபுகழாமணக்குநெய்பொருந்தவே
வகுத்தசங்கினதுசாறுமேசமனதாகவிட்டெரிவடித்தபின்
பகுத்தகாசிடைகொடித்துமேலுமதுபூசலுயதுபடிந்துபோம்
மிகுத்தசெம்முள்ளிகிரந்திநாயகமிரண்டும்வேதுகள்பிடித்திடவே. (சு)

## செவ்வாப்புக்கட்டி ரோகலட்சணம்.

பிடிக்குளேமிகவடங்கிடாமவிளநீரெனப்பெரியகொங்கையாய்
தடித்தமென்குதலையின்குழந்தைதலைமேலுமாமூடல்கள்தன்னிலும்
வெடித்திடாமலதுகட்டியாகிவளர்மேலுமேலும்வரவீங்கிஞல்
அடுத்தமேனியிற்செவாப்புக்கட்டியெனவேயறிந்தவுழதஞ்செயே. (ரு)

## ஷ வியாதிக்த சிகிச்சை.

செய்யவூசியைவெதுப்பிநீள்பெரியசிவந்தகட்டிதனிலொட்டியே
துய்யவாமணக்கெணெயில்மஞ்சளதுசுட்டபற்பமிட்டேகுழைத்
தையமின்றியதன்மேலிட்டிடவழுந்தியாறுமதுவன்றியே
வெய்யசூதமதனல்முலாமதுவிதிப்படிச்செய்துமேலிடே. (சூ)

## கிரந்திகரப்பான் ரோகலட்சணம்.

மேலுநெஞ்சினையடைத்துவீங்கியுயர்மேற்சுவாசமதுவாங்கியே
தூலமேனிநிறபேதமாகிவளர்தொண்டைகட்டியுடல்நொந்துனின்
ரூலமாமிருமற்கண்டுசிறுதொனிகளாகவேயழுதுகம்மிஞற்
பாலிநேர்மொழியினுய்கிரந்திகரப்பானெனச்சிகிச்சைபண்ணிடே. (எ)

## ஷ வியாதிக்த மருந்து.

பண்ணும்பூவரசம்பட்டைபால்கருநொச்சிச்சாரிரண்டுபலம்தாய்த்
திண்ணிலக்கடம்போடுமேகருஞ்சீரியோர்பலம்வசம்புகா
லெண்ணுமாதிகோரோசனைப்பொடியோர்நிஷ்கமாமணக்கெண்ணெய்சேர்
திண்ணமாகவேவடித்தொர்காசிடைபுகட்டநோயதுதெறிக்குமே. (அ)

## வாதகரப்பான் ரோகலட்சணம்.

தெறிக்கும்வீங்குமுடலெங்குமே திமிர்கடிப்பதாகியழுந்தேகமேற்
பொறிப்பறந்ததெனவேபுண்ணுகியதிலேவெடித்ததிகபொங்கமாய்
மூறுக்கியேசுரம்தாகிநாவதுவறண்டுநோயதுமுதிர்ந்திடில்
வெறிக்கருங்குழன்மாதேவாதகரப்பானைச்சிகிச்சைமேவிடே. (கூ)

## ஷ வியாதிக்த மநந்து.

மேவுமாவிலிங்கத்தோலிலைக்களிவிரிந்தவாதகரப்பான்பட்டை
தாவுகொம்மட்டிக்காயுமேனியிலைசாய்ந்ததோர்திருகுகள்ளியும்
வாவுநீலியிலையேழுமோர்வகையழக்குச்சாரெனவகுத்துநீ
மாவிளக்கெணெயிலிட்டெரித்ததைவடித்தொர்காசிடைகொடுத்திடே. (கo)

## பித்தகரப்பான் ரோகலட்சணம்.

கெர்டுமையானசிரலையிலைடுசொறிகூறுமுட்டினமும்வாந்தியுங்
கடுமையானசுரமெய்சிவந்திடுதல்கண்பசந்துதொனிமுந்தியே
தடைகளாகமலபந்தமாகிவிடில்சார்ந்தபித்தகரப்பானென்றே
விடமுநேரமுதமுஞ்சமானவிழிவெண்ணகைத்திருமருந்திடே. (கக)

## ஷ வியாதிக்த மநந்து.

மருந்துகுன்றிகருநொச்சியோடுமிகவளர்கழற்சியிலைமன்னுசீர்
கிரந்திலுயகமுடன்றனிச்சுரசமேயுழக்குவளர்கின்றவுழ்
புரிந்தவெண்தகரினற்புழுக்கையதுபோடிரண்டுபலநீதியா
யிருந்தவாமணக்கெண்ணெய்சேரொடுமெரித்தோர்காசிடையிசைத்திடே.

## சேற்றுமகரப்பான் ரோகலட்சணம்.

இசையுநெஞ்சுகளடைத்துளேவிரணமாகியேதலைவலித்திடும்
அசையும்வாயதனில்வெந்துமேதிரட்சியாகியேகெடுத்திடில்
விசையுஞ்சேற்றுமகரப்பனெனசிகிச்சைமேவுசெவ்வரிபறந்துநீள்
வசைபொருந்தும்விழிமலதிரண்டமூலவனிதையேயவுடதங்களே. (கஙு)

## ஷ வியாதிக்த மநந்து.

தங்குமாதிநன்னரியோடுவேம்பாடம்பட்டைசரிதாக்கியே
புங்கம்பூவுடனிலக்கடம்புவகைபோடுசாருகாற்சேரதாய்
மங்கையேகம்பிபிசின்கஸ்தூரியெனுமஞ்சலும்வகையரைப்பலம்
பொங்குமாமணக்கெண்ணெய்சேரொடுபொருந்தவேயெரித்துள்ளிடே. (கசு)

## தோஷகரப்பான் ரோகலட்சணம்.

உள்ளுமேலுநளிர்காச்சலாகியுடம்பெங்கும்புண்ணெனவழன்றுவாய்
கள்ளுநாறியுடல்தன்னிலேகழலுகண்டபூதமெனவீங்கியே
எள்ளின்மாமலரையொக்குமூக்கினிலரித்துநின்றழுதுமேங்கிலுல்
துள்ளுமான்குளம்பல்குலாய்கொடியதோஷமானகரப்பானிதே. (கஙு)

## ஷ வியாதிக்தமருந்து.

பானலங்கணுய்திருகுகள்ளியொபென்னுபூதகரப்பான்பட்டை
கானின்வேப்பந்தோற்சங்கங்குப்பிநிலகடம்புடன்கருநொச்சிலும்
வானமாங்குறிஞ்சாவினல்லிலவகைக்குச்சாறுசேர்காலதாய்
ஆனவாமணக்கெண்ணெய்சேர்கலந்தடுப்பிலிட்டெரித்துள்ளிடே. (கசு)

## அறிகரப்பான் ரோகலட்சணம்.

இடைசிறுத்துவனமூலபருத்துமொழியினியதானவதரத்திலுய்
துடையிடைக்குள்மிகுவிரணமாகியதிற்சூழ்சலங்களுமிகுந்துநோய்
புடையுநீள்தசைகறைந்துநாட்படவிருந்துபூதவுடல்வாடிலுல்
அடைவுசேரறிகரப்பலுமிதையறிந்துநற்றயிலமூட்டிடே. (கஎ)

## ஷ வியாதிக்தமருந்து.

மூட்டுவாய்வனசப்பத்திரங்கழுதைதலத்திமொய்த்தகருநொச்சிலுங்
கூட்டுவாயதிற்சங்கங்குப்பியொடுங்கூறுஞ்சாறுகாற்சேரதாய்
நாட்டுவாய்கருஞ்சீரியோர்பலம்நவின்றவாமணக்கெண்ணெயும்
வாட்டமாயரைச்சேரிலிட்டெரிவடித்தருந்திடவுமாறுமே. (கஅ)

## பொறிகரப்பான் ரோகலட்சணம்.

மாறுமாறெனவடித்தவாயெனவுடற்குளேதடிப்பாகியே
ஏறுமேசிவந்தோடியேகனத்தெங்கும்மேல்வெடித்துள்ளுமே
நீறுபோலனற்குளிர்ச்சியாகியுழலுவுலர்ந்துநெறிதாழ்ந்திடில்
ஆறிடாப்பொறிகரப்பலுமெனவறிந்துபண்டிதன்தொகுத்திடே. (கசு)

## ஷ வியாதிக்தமருந்து.

தொகுத்தபுன்கொடுகிரந்திநாயகஞ்சூழுஞ்சங்கிலெருக்குப்பியுஞ்
செகுத்தசின்னியொடுசெங்கத்தாரிகொத்தானுமேசெருப்படியுடன்
பகுத்ததூதளைகழற்சியாவினதுசாணிப்பாலரைக்கால்நிறை
வகுத்தமுத்தெணெய்முக்கால்நிறைக்குள்வடித்தாதிகால்முதலுள்ளிடே.

## வாலகரப்பான் ரோகலட்சணம்.

கால்கரங்சளொடுசந்துமேவலிகளாகியேகடிவிஷங்கள்போல்
மேல்தடித்ததிலும்நீர்பறிந்துமகள்மெய்யொடுங்கிதிரணங்களாய்
மூலநாவினுள்ளெதாண்டையோடுவிரணங்களாகிமுதிர்வெப்பமாம்
வாலையானகரப்பானிதென்றவுழ்தங்களுஞ்சிறிதுவைத்திடே. (உக)

## ஷ வியாதிக்கு மருந்து.

செறியுநீர்முள்ளிகிரந்திநாயகஞ்சிறந்ததுதுவளையிண்டையும்
மறைவில்குக்குடத்தாவணாகருப்பூரவல்லியிலையொடுமெகிழ்ந்
தறிவிலாததொருகழுதைதலத்தியின்சாறுசேரிவையழக்கதாய்
முறிவிலாமணக்கெண்ணெய்சேரொடுமுறையிற்காச்சியதையுள்ளிடே. (உஉ)

## சேங்கரப்பான் ரோகலட்சணம்.

காச்சலோடுகடுப்பாகியுதியுடற்கன்றிமெத்தவுமழன்றுபோய்
மேச்சலானதினவாகியெங்கணும்வியற்குருவுகள்மிகுந்துதான்
பாச்சலானமுகமுங்கருத்துடல்பரிந்துதானதுசிவந்திடிற்
சூட்சமாகிவளர்செங்கரப்பனெனத்தோற்றியேயவுடதஞ்செயே. (உங)

## ஷ வியாதிக்கு மருந்து.

செய்யபூவரசுசெங்கத்தாரிவேம்பாடம்பட்டையொடுசடைச்சியும்
நையவேசுரசமேயழக்கிவையில்நாட்டுகம்பிபிசின்கூட்டியே
வெய்யதானகருஞ்சீரிமூன்றுநிட்கமேவுமாமணக்கெண்ணெய்சேர்
பையவேவடித்துட்கொள்செங்கரப்பானுமேபரந்தோடுமே. (உச)

## மண்டைகரப்பான் ரோகலட்சணம்.

ஓடிமண்டைதனிலேபுண்ணுகியுயர்காதிற்சிழ்வழிந்தாறியே
நாடியேதலைவலித்துமூக்கினில்நயந்துநீரதுபரிந்திடும்
வாடிமெய்யதும்வெப்பமோடுகுறல்வளையினின்றினவுமாகவே
கூடில்மண்டைகரப்பானெனப்பரிகாரமேலினிக்கூறுவாம். (உடு)

## ஷ வியாதிக்கு மருந்து.

கூறும்வேளைகருநொச்சிபூவரசுகொடியவேம்புடனுணுவுமே
தேறியேசுரசமேயழக்கிவைதிரண்டமுத்தெனைச்சேரிலே
ஊறவிட்டெரித்தருந்திகாசிடையுகந்துகாதினிலுமூற்றிலுல்
நாறுமண்டைகரப்பானிருந்திடவுநியாயமல்லவெனவெண்ணுமே. (உசு)

## ஒடுகரப்பான் ரோகலட்சணம்.

எண்ணுகின்றதொருகீலிலேவலிகளேகமாகியதுகட்டியே
வண்ணமெய்நரம்பெங்குமேயிசிவுகுத்தலாகிமலபந்தமாய்
நண்ணியேதினவுமாய்த்தடித்துடலிளைவீக்கமுமிகுந்திடிற்
கண்ணியோடுகரப்பானிதென்றுமுறைகண்டுகொள்ளடிகருத்திலே. (உஎ)

## ஷ வியாதிக்த மருந்து.

கருத்திலெண்ணுநற்பெருமருந்துநிலைகாட்டில்வாழ்குவளம்பட்டையுந்
திருத்தமானவெலியாமணக்கிலைடுசேர்ந்தவேம்படிப்பட்டையும்
பெருத்தகோசலமும்விட்டெரித்துடலிற்பேணிவேதுகள்பிடித்தில்
வருத்தியோகெரப்பானிருந்திடவழக்குமில்லையடிமங்கையே. (உஅ)

## சட்டைகரப்பான் ரோகலட்சணம்.

மங்கைகிலில்வலிகள்ளிப்பூவெனமலர்ந்துவாரியிடுமெய்யினிற்
பொங்குநீர்ப்பனிகள்போல்விழுந்துபுகல்வெப்பமாகிமலஞ்சிக்கியே
துங்கமானசிரநோவுமாகிவளர்தூயவன்னமதுதுவேசமாம்
தங்குசட்டைகரப்பானெனச்சிகிச்சைத்தானதற்குவிரித்தோதுவாம். (உக)

## ஷ வியாதிக்த மருந்து.

ஒதுசங்கினதுகுப்பிபூவரசுவுழலத்திநிலக்கடம்புடன்
நீதிசேர்குவளேவேம்பிவ்வாறுவகைநிகழ்த்துஞ்சாறுகளழக்கதாய்ச்
சாதியாட்டினதுபுழுக்கையோர்பலமுந்தாக்குமுத்தெணையிலிட்டெரித்
தாதிகாலமுதலுட்கொள்சட்டைகரப்பானகன்றுவிடுமெரிவையே. (உ0)

## வெடிகரப்பான் ரோகலட்சணம்.

அரிவையேயுடல்களெங்கும்வீங்குமசைகிலில்வீங்கும்தில்துண்டமாம்
விரியவீங்கியதிலேவெடித்திடுமிகுந்தவெப்பதுவுமாகவே
திரிகியேதலைவலித்துமேலும்வெகுதினவுமாகியதுவோடிலு
லுரியதாகும்வெடிகரப்பனுமெனவுகந்துபண்டிதமுணர்த்திடே. (உக)

## ஷ வியாதிக்த மருந்து.

உணர்த்திடாதசங்கங்குப்பிசின்னிவளர்வுகந்தமேனியொடுசடைச்சிவேர்
பணைத்திடுங்கழற்சிபுங்கம்வேர்சிறந்தபகருகின்றனனுணவுமே
இணைத்தசாறுவகையழக்குமாமணக்கெண்ணெய்சேரினிலெரித்துநீ
யணைத்தருந்திடவுமோடுமேவெடிகரப்பனுமெனவறிந்திடே. (உஉ)

அறியுமிந்தவிதமேமிகுந்துகரப்பானுமானதிதறிந்துதான்
நெறிகொள்தூன்முறைமருந்துசெய்கவதுநீங்குமெய்யிலுறும்வாதமே
செறியும்வேளையதில்மந்தமாகிப்பலசேட்டைபண்ணுமிதுசேர்ந்தபின்
பிறிவதாகிவளர்குணங்கள்செய்யும்வகைபேருரைப்பனதுமாந்தமே. (உந)

## மாந்தரோகலட்சணம்.

### பொது.

மாந்தமானதுகண்டிடில்வயிறுவுப்பிசமாய்ச்
சேர்ந்தபேதியும்பற்பலவிதங்களாய்ச்செறிந்து
வாந்தியோடுமெய்மயக்கமுங்குளிருடன்வெப்புங்
காந்துதாகவும்பிரமையுங்கண்மயக்கிடுமே. (கச)

### ஷ வியாதிக்த மருந்து.

மயக்குதும்பையும்வேளையுத்தாமணிவனத்தில்
தியக்குபேய்தனைமிரட்டியும்நொச்சிலுஞ்சேர
கயக்குசாணக்கிவெதுப்பினையடக்கியுங்கணக்காய்
அயக்குசாறுடனுமையின்பற்பமுங்கூட்டே. (கரு)

### தலைமாந்தரோகலட்சணம்.

கூட்டுசந்துகள்தலைவலிவேர்வைகொட்டாவி
சாட்டியத்தொடுதலைகனங்குலைவலிசலம்போல்
ஆட்டமில்லாதுகுளிர்சுரம்திகமெய்யூத
காட்டிலுல்தலைமாந்தமென்றதையறிகரும்பே. (கசு)

### ஷ வியாதிக்த மருந்து.

அறியும்மேனியுத்தாமணியகத்தியீர்வேளை
நெறிகொளெந்தையுஞ்சாறுசெய்தாமையினீறும்
முறியும்நல்வசம்பின்கரிகலந்துள்ளின்மூட்டி
வெறிகொண்மெய்யினிற்றடவிடமாந்தமேகிடுமே. (கஎ)

### விஷமாந்தரோகலட்சணம்.

ஏகவாந்தியும்பிதற்றலும்வயிற்றுநோயிடைக்கீழ்
ஆகச்சீதளக்குளிராச்சியுமாந்துதலரிக்கண்
காகம்போலுள்ளிற்சொருகுதல்மலஞ்சிக்கிக்கழிதல்
வேகமாய்ச்சுரமடிக்குதலிதுவிடமாந்தம். (கஅ)

### ஷ வியாதிக்த மருந்து.

விடத்தினேர்விழியாய்சுக்குவசம்புவெள்ளுள்ளி
திடத்தினிந்துப்புச்சாரணைவேர்திரள்குரட்டை
படைத்துவாழ்கடேரைகணிபாச்சொத்தியெட்டும்
அடைத்தசார்முறித்தருந்திடமாந்தமும்றுமே. (கஙு)

## நீர்மாந்தரோகலட்சணம்.

அறுதியாகமெயாதியந்தம்வேர்வையேமிகுந்து
இறுதியாய்த்தலைவலிமுகமினுமினுப்பிறைச்சல்
உறுதியாய்க்கழிந்திடுதனீரிறங்குதலுதரங்
குறைவிலாக்குலைவிகள்நீர்மாந்தத்தின்குணமே. (சஅ)

## ஷை வியாதிக்கு மருந்து.

குணநுணுநொச்சிருப்பையின்மேனிவேய்மிரட்டி
இணர்கொள்தும்பைநல்வேளையிவ்வாறையுங்கசக்கிக்
கணம்வசம்புள்ளியோமமின்ஞனங்கையுங்கரைத்து
மணங்கொள்பிள்ளைக்குக்கொடுத்திடின்மாந்தமுந்தொடாதே. (சக)

## வறள்மாந்தரோகலட்சணம்.

தொடுமெய்த்தோல்தளர்ந்துருவழிந்துடல்குளிர்ந்திருக்கு
முடல்வெளுத்துக்கண்மயக்கமுஞ்சுழலலுண்டாகிக்
கடுகெடுப்புடன்கால்கைகளூதிப்பால்குடிக்கும்
வடிவுபல்குணமாம்வறண்மாந்தமுமானே. (சஉ)

## ஷை வியாதிக்கு மருந்து.

மானஞுய்சடாமாஞ்சில்வேர்க்கொம்புள்ளிவசம்பு
ஆனதோருத்தாமணிநிலவிளாமிளகுவித்துப்
பானமாங்கியாழத்தினிற்கமடமாம்பற்பந்
தானுமேகலந்துள்ளிடத்தாழ்ந்துபோம்மாந்தம் (சங)

## சோரியாமாந்தரோகலட்சணம்.

போகுமேவயிறுபாலெனக்கழிந்திடும்பொருமுந்
தேகமுஞ்சுரமாய்க்குளிர்கண்டிடிடுங்தெவுட்டிச்
சோகமுந்தலைவயின்வலிவாந்தியுந்தோன்றி
யேகமாயழுஞ்சொரித்திடாமாந்தமென்றெண்ணே. (சச)

## ஷை வியாதிக்கு மருந்து.

எண்ணுஞ்சாணக்கிசாரணையிந்துப்புகோஷ்டம்
நண்ணும்பேய்தனமிரட்டியுமிளகுநாயுருவி
ஒண்ணுமேநுணுவோமமிவ்வொன்பதுஞ்சுரசம்
பண்ணியாமையின்பற்பமுங்கொடுக்கப்போம்பறந்தே. (சஞ)

### கட்டுமாந்தரோகலட்சணம்.

பறந்தமெய்யினில்வெப்புடனுறக்கமும்பலகால்
உறைந்தவேர்வைகொட்டாவியுமுதரத்தில்வலியும்
நிறைந்தநாள்மலஞ்சிக்கியுங்கழியும்நேரிறைச்சல்
அறைந்தசீர்க்கட்டுமாந்தமென்றேயறியனமே. (சசு)

### ஷை வியாதிக்கு மருந்து.

அனமேசுக்குச்சிற்றறத்தைவெற்றிலையுடனேமங்
கனமுருங்கையின்தோலிவைசுரசமாய்க்கண்டு
இனியநிம்பநெய்சேரரைவிட்டெரித்திட்டால்
முனிவதாங்கட்டுமாந்தங்களகலும்மொய்குழலே. (சஎ)

### பால்மாந்தரோக லட்சணம்.

மொய்கொள்பாலுபாலாய்க்கழிந்திடுமுகம்வேரூய்
கைகள்கால்களும்வெதும்பிடும்வாந்திபால்காணுஞ்
செய்யகண்களும்வேலையமாஞ்சிரமெடுத்திராது
உய்யமாந்தும்பால்மாந்தமென்றேயறியுடனே. (சஅ)

### ஷை வியாதிக்கு மருந்து.

உடனுத்தாமணிசுக்குடன்வசம்புள்ளிமிளகு
திடமதாஞ்சடாமாஞ்சிலுங்குட்டியின்விளாவுங்
கடமதாங்கியாழங்களாய்ச்செய்கமடத்தின்
வடிகொள்பற்பமிட்டருந்தப்பால்மாந்தமுமகலும். (சசு)

### ஊதுமாந்தரோக லட்சணம்.

அகண்டவாந்தியுங்கழிச்சலுஞ்சுரங்களுமாகிச்
சுகந்தமேனியில்வீக்கமுந்துண்டித்துப்படிந்
திகந்தாமுதரத்தினிலிறைச்சலுண்டாகி
லுகந்தசேய்க்கிலூதுமாந்தங்களென்றிசைப்பாய். (நo)

### ஷை வியாதிக்கு மருந்து.

இசையுஞ்சுக்குநீர்முள்ளிபூலுகமுமெடுத்து
விசையதாங்குட்டிவிளாசுரைக்கொழுந்துடன்வேலை
யசைவிலாக்கியாழத்தினிலாமையின்பற்பம்
நசையொடிட்டுணிலூதுமாந்தங்கள்நாடாதே. (நச)

## கல்மாந்த ரோகலட்சணம்.

நாடியேசுரம்டித்துமெய்வெளுத்துநாவுலர்ந்து
நீகொல்குளிர்ந்துங்கையான்முகத்தினெருடி
வாடும்பற்பலகுணங்களாய்க்கழிந்துடல்வடிந்து
கூடுமொஞ்சிரவேர்வைகல்மாந்தத்தின்குறியே. (குஉ)

## ஷை வியாதிக்த மருந்து.

குறிகொள்திப்பிலிவசம்புள்ளிகூட்டுப்பேய்மிரட்டி
நறுநிலாவரைகடுகுரோகணியுளுயுருவி
வெறிகொணிம்பநெய்விட்டெரித்தாமையின்பற்ப
மறிவதாயிடப்பறக்குங்கல்மாந்தங்களயலே. (குஙு)

## வலிப்புமாந்த ரோகலட்சணம்.

அயருங்கால்கையும்டிக்கடியிசுப்புகளாகும்
வயிறுபல்விதங்கழிந்துமார்பினில்வலிமிகுத்துத்
தியக்கும்பல்கிட்டிக்கடித்திடும்வாந்தியுஞ்சேர்ந்து
மயக்குமேவலிப்பாகியமாந்தமாமாதே. (குச)

## ஷை வியாதிக்த மருந்து.

மாதுசுக்குச்சிற்றரத்தைவெள்ளுள்ளிமாவிலிங்கு
மோதுவேளைநன்முருங்கையுமுசுறுடன்மூட்டை
கோதிலாச்சுரசத்திற்கோரோசனையிழைத்தப்
போதுமேகொடுத்துள்ளியின்தயிலமேற்பூசே. (குடு)

## போர்மாந்த ரோகலட்சணம்.

பூசலாய்ச்சுரமடித்துடல்கனைத்துபோங்கூடாய்
வாசமாய்க்கழிந்துதடுகளுலர்ந்துவாய்நுனையாய்
நீசவாந்தியுங்கண்குழியுடனெஞ்சுபுண்ணு
பூசலாகும்போர்மாந்தமென்றேயறிமுனமே. (குசு)

## ஷை வியாதிக்த சிகிச்சை.

முனமுத்தாமணிச்சுக்குத்திப்பிலிமுதிர்தும்பைப்
பினுங்கேளிந்துப்புசாணக்கிபேயையுமிரட்டி
ஙனிகொள்சீரகம்பொதிலைகோமதம்நாட்டி
புனிதமோருடமருந்தப்போர்மாந்தமுந்தொலையும். (குஎ)

### சந்நிமாந்த ரோகலட்சணம்.

தொலைவில்தாகமுமயக்கமுமறிவுதொந்தித்தல்
தலைபுரட்டல்கால்குளிர்ந்திடலுவில்முள்தடித்தல்
மலைவுசெய்வெறும்வாந்தியுமேப்பமும்வலிப்புஞ்
சிலைநுதற்கணேசந்நிமாந்தமிதெனச்செப்பே. (நிஅ)

### ஷை வியாதிக்கு மருந்து.

செப்பும்வெற்றிலைமுசருடன்முட்டைசிற்றரத்தை
வெப்புசுக்குடன்முருங்கைமாவிலிங்கையுஞ்சுரசம்
ஒப்பிலாதகஸ்தூரிசேர்த்துட்கொடுமேலி
லப்புவாயுள்ளியண்டத்தின்தயிலமாரணங்கே. (நிக)

### பேய்மாந்த ரோகலட்சணம்.

அணங்கிடுப்புகைகால்துடையானனமூக்கு
வணங்குபின்பிடர்நரம்பிவையெட்டிலும்வலிக்கும்
இணங்கும்வாய்நுரைமயக்கமும்பிதற்றல்கீழிழுத்தல்
கணங்கொள்பூதப்பேய்மாந்தமென்றுகந்துகண்டறியே. (சுo)

### ஷை வியாதிக்கு மருந்து.

கண்டகாட்டத்திப்பூத்தும்பைவிட்டுணுகரந்தை
விண்டமேனியுத்தாமணிதுளசிபேய்மிரட்டி
கொண்டசுக்குடன்சுரசமாய்க்கோமதங்கூட்டி
யுண்டபோதுபேய்மாந்தங்களகன்றிடுமுதிர்ந்தே. (சுக)

### தொலைமாந்த ரோகலட்சணம்.

உதிர்கொட்டாவியுந்தாகமுமுடம்பெங்கும்வலியு
மதிற்சுரத்தொடுமுகத்தினைப்பார்த்தழும்வியற்கு
முதிற்விலாப்பருச்சதிகமாய்முயங்கிமுன்விழுந்தாற்
கதிர்கொள்வெந்தொலைமாந்தமென்றறிந்துகொள்கண்ணே. (சுஉ)

### ஷை வியாதிக்கு மருந்து.

கண்ணேசுக்குசிற்றரத்தையும்விட்டுணுகரந்தை
வெண்ணற்சாணக்கிலவங்கப்பூகுட்டியின்விளாவும்
நண்ணவேசுரசத்திற்கஸ்தூரியைநாட்டி
யுண்ணவேதொலைமாந்தமுமொழிந்திடுமுகந்தே. (சுங)

## சுரமாந்த ரோகலட்சணம்.

உகந்தமெய் மூகமினுமினுப்பா மூயர்ச்சுரமும்
பகர்ந்தபாலருந்தா துநீர்சிவந்திடும்பார்க்கும்
வகிர்ந்தமாமலஞ்சிக்கியுமயக்கமும்வலியுஞ்
சுகந்தமாயடிகுளிர்ந்திடில்சொல்சுரமாந்தம். (சுச)

## ஷை வியாதிக்த மநந்து.

சுரசமேபிழிதும்பையுத்தாமணிதுளசி
தரணிமேல்வெதுப்படக்கிநாயுருவிசாணைக்கி
விரைவில்பேய்தனைமிரட்டியும்விட்டுணுகரந்தம்
பரிவொடாமையின்பற்பமிட்டருந்தப்போந்தெளிந்தே. (சுடு)

## உப்புமாந்த ரோகலட்சணம்.

தெளிந்ததாகமுஞ்சுரமுடன்பிதற்றலுஞ்செருமிக்
களங்கமாயிறைந்துப்பியுப்பிக்கழிந்துடனே
வளர்ந்தவாந்தியுமூலையைநத்தாமலுமயக்கந்
தளர்ந்ததாலுப்புமாந்தமென்றறிவாய்நீதானே. (சுசு)

## ஷை வியாதிக்த மநந்து.

தானேமேனியுப்பிரண்டுமேகசக்கிக்கொள்சாற்றைப்
பானமாகவேபருகிஞல்தீர்ந்திடுமின்னம்
கானமார்மூக்காவேளைசுக்கோமமுங்கருக்கி
யானதானநாயுருவியுமாமைநீறருந்தே. (சுஎ)

## கணமாந்த ரோகலட்சணம்.

அருந்துமெயிளைத்திருமலுமடிக்கடிச்சுரமுங்
திருந்துமூக்கில்நீர்வடிதலும்வயிறப்பும்சிரநோய்
புரிந்திசைச்சலும்பலவிதம்வயிறுபோக்குடனே
வருந்துகண்ணினில்மயக்கமுமாங்கணமாந்தம். (சுஅ)

## ஷை வியாதிக்த மநந்து.

கணம்வசம்புள்ளிசாரணைகடியநாய்வேளை
குணவுத்தாமணிநிலவிளாகொட்டைநெய்சமனுய்த்
தனியக்காச்சிப்பெண்தனத்தின்பால்சேர்த்துணத்தானே
யணிகொளுங்கணமாந்தமுமகலுமாரணங்கே. (சுக)

ஆரணத்திலுரைத்தனன்வியாதியுமதற்குப்
பூரணங்களாய்மருந்துகள்சிகிச்சையும்புகழ்சேர்
காரணக்குருமூலமாய்க்கற்றவர்பிடகர்
சீரிணங்குநன்மடநலாய்செகத்தினிலோதே. (எ0)

## கணோகபோதுலட்சணம்.

### வேறு.

ஓதியதோர்பில்லைகட்குக்கணந்தான்கண்டா
லுற்றமெய்யில்கதகதப்பாய்ச்சுரமுங்காணும்
பேதியதுகெட்டபால்கருநீர்ப்போலாம்
பெருக்கும்வயிறுங்கால்கைகுச்சிபோலாஞ்
சீதமோடிரத்தங்கள்தாகங்காணுஞ்
சிறந்தகால்கைகுளிர்ந்திருமலுண்டாம்
நீதியுடன்கண்குழிந்துமூக்குநாக்கு
நேராகவெந்துடலம்வெளுத்துப்போமே. (எக)

## ஷீ வியாதிக்கு மருந்து.

வெளுத்ததொருபருத்திவித்துபொடிதலையின்காயும்
மேலானகிராம்புகச்சோலம்சீரி
களித்தயிலவம்பிசினும்லவங்கப்பட்டை
கனமுள்ளசாதிக்காய்காசுகட்டி
வளர்த்தவிளவறுப்பாகவறுத்துக்கொண்டு
வாகானநவநீதமொருசேர்கூட்டி
யிளைத்தகணப்பில்லைக்குக்கொடுத்தாயாலு
லிருந்தகணம்பறந்துபோமினியபெண்ணே. (எஉ)

## நீர்க்கண ரோகலட்சணம்.

இனிதானநீர்க்கணந்தான்கண்டதாலு
லிருகைகால்முகமினுப்பாய்மயக்கமுண்டாம்
பனிநீர்போலடிக்கடிகழிச்சலாகிப்
பகர்நாக்குபுண்ணுய்வாய்வறண்டுபோகும்
நனிவேர்க்குஞ்சந்துகளில்வெப்பங்காணும்
நன்மூக்கில்நீர்வடியுந்தாகங்காணுங்
தனியானதலைவலியுமிகுந்துநிற்குஞ்
சார்வானவழுத்தங்கள்சாற்றக்கேளே. (எங)

## ஷ வியாதிக்கு மருந்து.

சாற்றுமுசுமுசுக்கைகண்டங்கத்திரியிலேடெஞ்
சாதகமாஞ்செவ்வல்லிக்கொடியுங்கூட்டி
ஏற்றகருஞ்சீரிதண்ணீர்மிட்டான்மூல
மினியமணத்தக்காளிதூதுளைவேர்முள்ளி
போற்றுகம்பிப்பசின்திருகுகள்ளிவேரும்
புகழாவின்பாலுடன்வெள்ளாட்டுப்பாலு
மூற்றியதோர்முத்தெண்ணெய்தன்னிற்காச்சி
யுட்கொள்ளநீர்க்கணந்தாலெடிப்போமே. (எச)

## வறட்கண ரோகலட்சணம்.

ஓடுகின்றவறட்கணந்தான்வந்ததாலு
லுடலிலேத்துத்தாகமஸ்திசுரமுங்காணும்
நீடுகண்டம்புகைந்துபுகைந்திருமலாகி
நீர்வெள்ளையாயிறங்குமூர்ச்சையுண்டாம்
வாடுகின்றநாச்சுமஞ்சள்வெள்ளைமுள்ளாய்
மயக்கமுடன்முகமஞ்சட்பூத்துநிற்கும்
நாடுகின்றவயிற்றுவலிசற்றேகாணும்
நலமானவவுடதத்தைநாட்டக்கேளே. (எடு)

## ஷ வியாதிக்கு மருந்து.

நாட்டுநிலக்கடம்புகுட்டிவிளாவிலேடு
நன்னரிசீரிபொடுதலைகச்சோலம்
வாட்டுகின்றநெற்பொரியும்பருத்திவித்தும்
மதுரமொடுதேற்றானின்விதையுங்கூட்டித்
தாட்டிகமாமிளகிவைபதிலொன்றுந்தான்
தவறுமலிளவறுப்பாய்வறுத்துக்கொண்டு
கூட்டியதோர்நவநீதந்தன்னிற்கொண்டால்
குடிகெட்டவறட்கணந்தான்குலைந்துபோமே. (எசு)

## எரிகண ரோகலட்சணம்.

குலையானவெரிகணத்தின்குணத்தைச்சொல்வோங்
குலையெரிச்சல்மேலெரிச்சல்தாகம்வாந்தி
யலைமோதிப்புறண்டுபுறண்டவதிப்பட்டங்
கழுதுமிகவசமழிந்துமுகங்கீழாகித்

தலையசைந்துவாயாலேமூச்சுண்டாகித்
தாங்காதவாராட்டங்கண்டுதொலல்
மலைபோலுந்திரண்டமூலவனிதைமாதே
மருந்தினுடவிவரத்தின்வாறுகேளே. (எஎ)

## ஷ வியாதிக்கு மருந்து.

வாறுகோரோசனைதான்மூன்றுநிட்கம்
வண்டுணுமலரேலமதுரங்கோஷ்டங்
தேறுவிலாமிச்சைவேர்மாசிப்பச்சை
சிறந்தசாதிப்பத்ரிவகைக்கோர்நிட்கங்
கூறுகின்றவேளைவேர்ச்சாற்றிலுலே
யொருசாமமரைத்துண்டைகடலைக்கொப்பாம்
வீறுமூலப்பாலதனிற்கொடுத்தாயாலல்
வெய்யவெரிகணம்பறந்துமெலிந்துபோமே. (எஅ)

## சூழிகணத்தின் ரோகலட்சணம்.

மெலிந்துவருஞ்சூழிகணத்தின்பெருமைகேளாய்
வெய்யசுவாசஞ்சுழித்துச்சுழித்துவாங்கும்
நலிந்துபற்பலவிதமாய்க்கழிந்துசோர்ந்து
நரம்புகளைப்புடைத்துமிகுசுரங்களாகிப்
பொலிந்தசிறுவாயாலேவாந்திகோழை
புகழ்நாக்குநெஞ்சீரல்வெந்துபோகும்
கலந்தமூலகுடியாமலிளைத்துப்போகும்
கண்சொருகிநாசியுப்பல்காணுந்தானே. (எசு)

## ஷ வியாதிக்குமருந்து.

காணுகின்றநாயுருவிதுளைவேர்க்கொம்பு
கருஞ்சீரிதலைச்சுருளியரத்தையோடு
மூணுகண்டங்கத்தரியுங்கியாழமாக
வுள்ளிட்டுஞ்சூழிகணந்தான்வாடாதாகில்
சேணுயர்ந்தமுத்தெண்ணெய்சேர்வொன்றுக்குத்
திருகுகள்ளிப்பாலதுவுஞ்சேர்கால்தாக்குப்
பேணுநமுகிலைச்சுரசமரைச்சேர்கம்பிப்
பிசின்கருஞ்சீரிநிட்கங்காச்சிக்கொள்ளே. (அ0)

மூலகண[illegible]ம்.

கொள்ளவேமூலத்தின் [illegible]ன்
கொடியமலம்பல[illegible]ன்மேல்
துள்ளவேயிரத்தம துமிகுந[illegible]
தொந்தமாயாசனத்திற்ச[illegible]கி
வெள்ளையாய்ச்சடலமதுவெ[illegible]ம்
வெப்பமொடுதலைவலியுட[illegible]சும்பி
யுள்ளுகின்றதுடையதுவும்வற்[illegible]ரு
யுணவுண்ணுதிளைத்துப்பே[illegible]டலந்தானே. (அக)

ஷை வியாதிக்கு மருந்து.

உடனுத்திப்பட்டையதின்பூவுங்கொண்டே
யுரைத்தபழம்பாசியதிவிடயத்தோடு
திடமானவிலவுபிசின்புளியாரைகூட்டிச்
சிறுலவங்கப்பட்டையாவாரைவேரு
மடைவானவெந்தயமுமத்தங்காப்புல்
லரிசிவகைக்கிரண்டுநிட்கமாவின்னெய்சே
ரிடையாகவிட்டெரித்துக்கொடுத்தாயாலு
லினிமையாய்மூலகணமிருந்திடாதே. (அஉ)

மூக்குகணத்தின் ரோகலட்சணம்.

இருந்தொருமூக்குகணத்தியல்பைக்கேளா
யினியமலமூக்கிமூக்கியடியுந்தள்ளி
வருந்திமலத்தோடிரத்தங்கூடச்சேரும்
வாந்திசுரந்தாகமுகமினுப்பாய்நிற்கும்
சிருந்துமூலையுண்ணுதலாக்குவேகுஞ்
சிறந்ததுடையிடைவலிக்குந்தலைகீழாகும்
விரிந்துகைகால்குளிர்ந்திருக்கும்பவளவாய்தான்
வெங்கடுப்பாமூடலிளைக்கும்வித்தைதானே. (அங)

ஷை வியாதிக்கு மருந்து.

வித்தையுடன்மூக்குமட்டைநுணைகழற்சி
விடத்தவரைதுவரைவறட்பூலாவுங்கொண்டு
சுத்தசாரணைமுருங்கையெட்டிவகைக்கொழுந்துஞ்
சொல்லுகின்றபருத்திப்பிஞ்சுடனேசேர்த்து

வெற்றியுடன்நறுக[illegible]பதிலே
மேற்பெரிடியாய[illegible]நும்
நத்தியதின்மேலிட்[illegible]
நலிந்தமுக்குகண[illegible]யே. (அசு)

விஷக[illegible]லட்சணம்.

கணமென்றவிஷகணத்தி[illegible]த்தைக்கேளாய்
கைகாலுமதைத்துநெ[illegible]லியுண்டாகுங்
குணமில்லாச்சாணியைப்போறபேதியாகுங்
குறல்கம்மிமூலையுண்ணுதிருமலுண்டா
மிணையிலாமுகம்வெளுத்துச்சுரமுங்காணு
மென்னேரநெஞ்சுவிலாகொதிப்புண்டாகுங்
துணையானகண்சிவக்குமிளைத்துப்போகுஞ்
சொல்லுகின்றதேகம்பலவிதமாந்தானே. (அரு)

ஷை வியாதிக்ஷ மருந்து.

தானென்றநிலக்கடம்புகொச்சிலோடு
சாற்றுகண்டங்கத்தரிவல்லாரைகூட்டி
நானென்றகரிசாலைவெற்றிலையிலேடு
நாயுருவிகவிழ்தும்பையுழக்குவீதம்
தேனென்றதிரிபலையும்வசம்போடெள்ளி
சேருவகைக்கிரண்டுநிட்கஞ்சீராய்க்கொண்டு
வாமென்றவாமணக்கின்னெண்ணெய்நாற்சேர்
வடித்தருந்தவிஷங்கணமாய்ந்துபோமே. (அசு)

ஆமகண ரோகலட்சணம்.

போமென்றவாமகணங்குணத்தைக்கேளாய்
பொருமியேசீதரத்தம்பரந்துகாணு
மாமென்றசுவாசம்விழிசுழித்தல்காச்ச
லடிவயிற்றில்வலிவேர்வைகழுத்துநாண
லோமென்றமூக்குவெந்துதிடுக்கென்றேதா
னுலைந்தெழுந்துகைகாலுங்குளிர்ந்துகாணு
நாமென்றகண்மூடிவிழித்திடாது
நலிந்துபோமருந்ததற்குநயமாய்க்கேளே. (அஎ)

## ஷை வியாதிக்தமநந்து.

நயமானகாட்டுமல்லிகடுக்காயோடு
நல்லகருஞ்சீரிமருட்கிழங்குகூட்டிச்
செயமானகடுகுரோகணியீருள்ளி
செம்முள்ளிகுட்டிவிளாபுரசம்வித்து
மூயர்வானவாமணக்குத்தயிலத்திட்டே
யொருகாச்சலானபின்புசாதிப்பத்ரி
தயவானசாதிக்காயிரண்டுஞ்சேர்த்துத்
தாக்கிலுலாமகணந்தாழ்ந்துபோமே.

## மந்தாரகண ரோகலட்சணம்.

தாழ்ந்துவருமந்தாரக்கணத்தைக்கேளாய்
தாக்கிவயிறுப்பிசமாய்மலத்தைக்கட்டிச்
சூழ்ந்துநளிர்சுரமயக்கமிருமலுண்டாய்ச்
சுவாசமொடுதலைவேர்வைமூலையுண்ணுது
வாந்திதிடுக்கிட்டலறலிளைத்துப்போதல்
வடிந்துவருமூக்கிலுற்சலங்கள்மிஞ்சி
யேந்துமிளங்கொங்கைநல்லாய்மருந்துதற்கே
யியம்புகிறேன்பலமாகவெடுத்துத்தானே. (அசு)

## ஷை வியாதிக்த மநந்து.

எடுத்தகணப்பூண்டுவிஷ்ணுகாந்திநொச்சி
யினிதானகுட்டிவிளாகண்டங்கத்ரி
தடுத்ததொருதூதுளைவேராடாதோடை
சாற்றுகூத்தன்குதம்பைவறட்பூலாவு
மடுத்ததொருவல்லாரைநன்ஞரிதானு
மசையாமல்பிட்டவியலாகவைத்துக்
கொடுத்திடவேமந்தாரகணந்தான்பெண்ணே
கூறுமலோடிவிடுங்கொடிதுதானே. (கூ0)

## அந்தகண ரோகலட்சணம்.

கொடிதானவந்தகமாங்கணத்தைச்சொல்வேன்
கூறுகின்றவந்தியிலேகண்தோன்றுது
கடிதானசுரந்தோன்றுமிரத்தம்பேருகுங்
காலசந்துப்பலபலவாய்ச்சத்தம்பேசும்

வடிவானமுகந்தானும்சட்போல்லா
மார்புமேடாயெழும்பிமயக்கமுண்டா
மிடியானயருசிகண்டுதேகம்வற்றி
மேலான்மூலையைத்தான்பற்றும்பாரே. (கூக)

## ஷை வியாதிக்கு மருந்து.

பற்றுகின்றநீலிவறட்பூலாவோடு
பாங்கானசிறுகீரைபொன்னுங்காணி
நத்துமிந்தவேர்ச்சுரசம்வேறேவைத்து
நற்கடுக்காய்த்தேற்றானின்விதையுங்கூட்டிச்
சுத்தமூலப்பாலிலரைத்துடனேசேர்த்துத்
தூய்யவெண்ணெய்கலந்துகொடுலவணந்தள்ளி
மற்றுமிந்தமருந்தினையுச்சிக்கிட்டால்
வந்ததொருவந்தகமாங்கணம்வராதே. (கூஉ)

## சுரகண ரோகலட்சணம்.

வாரானசுரகணந்தான்பெருமைமெத்த
மகத்தானதாபசுரம்பிதற்றல்தாகஞ்
சீரானசீரமிகவிளைத்துப்போகுஞ்
சிக்கிவிடுமலந்தன்னையிருமலுண்டாம்
வேரானகண்மஞ்சள்சிறுநீர்மஞ்சள்
மிக்கவயிறிணைந்துகத்துமூலக்கண்கூடுந்
தாரானதிவையெல்லாங்கணத்தின்பேதஞ்
சாற்றுகிறேனவுடதத்தால்சாந்திதானே. (கூங)

## ஷை வியாதிக்கு மருந்து.

சாந்தியென்றதேற்றான்வேர்வறட்பூலாவுந்
தாக்குவிஷ்ணுகாந்திசிற்றாமுட்டிவேருஞ்
சிந்திகஞ்சாங்கோபைபற்பாடகத்திலோடு
சிறந்தபொடுதலைகோவ்ஷடங்கிராயுஞ்சேர்த்துச்
சேர்ந்தமுத்தக்காசுசுக்குவெந்தயமுங்கூட்டி
லேந்துவிளமூலமாதேபறந்துபோகு
மினிதானசுரகணந்தானிருந்திடாதே. (கூச)

## அக்காகண ரோகலட்சணம்.

இருந்ததொருவக்கரமாங்கணத்தின்செய்கை
யியம்புவோந்தாதுமெத்தத்துடித்துநிற்கும்
வருந்துகின்றநாசிவாயாவிதோன்று
மதிமுகந்தான்வெளுத்துவிடுஞ்சுரங்களுண்டாங்
திருந்துதலைநாக்கிவைகள்வெந்துபோகுஞ்
சீரியதோர்மூக்கிலுற்சலமுங்காணும்
பொருந்துசிரம்வலித்திடுமெய்குளிர்ந்திருக்கும்
பொல்லாதிதற்கவுடதம்புகலக்கேளே. (கூடு)

## ஷை வியாதிக்கு மருந்து.

புகலுவேன்செண்பகமொட்டேலஞ்சுக்குப்
புகழ்கோஷ்டமதிமதுரம்லவங்கப்பட்டை
யகலுமுத்தக்காசுடனேசீரியெட்டு
மதிகவறுப்பில்லாமல்வறுத்துக்கொண்டு
சுகமுடனேதூள்செய்துசமனுய்ச்சீனி
தூக்கியதிற்கலந்துவெறுகடிதான்கொண்டால்
பகையானவக்கரமாங்கணங்கள்தானும்
பறந்துவிடுங்கருவரிக்கண்பரந்தமாதே. (கூசு)

## தன்றியக்கரண ரோகலட்சணம்.

மாதேகேள்குன்றியக்கரகணத்தின்
வாறுகேள்சிறுநீர்தான்மஞ்சளாமப்
போதேதானிடைக்கிமேல்சுரமுங்காயும்
பொல்லாதவிருமலுடன்சுவாசங்காணு
மோதாமற்குறல்கம்மிவெளுக்குந்தேக
மூலர்ந்துவிடுந்தாகமன்னதுவேஷமுண்டாஞ்
சூதாகியீரல்வெந்துபுண்ணுய்ப்போகுஞ்
சுளுவாகமருந்திதற்குச்சொல்லுவேனே. (கூஎ)

## ஷை வியாதிக்கு மருந்து.

சொல்லுவேன்சிறுகீரைபொன்னுங்காணி
சுண்டையிந்தமூன்றுவகைவேருங்கொண்டு
நல்லபசுவெண்ணெய்தனிலரைத்துட்கொண்டால்
நாடாதுகுன்றியக்கரக்கணந்தான்

வல்லியிளங்கொடிபோலுமிடையுஞ்செவ்வாய்
மதிமுகமுஞ்செவ்விளநீர்க்கொங்கைமாதே
புல்லுண்ணும்பசுவின்பாலன்னமுண்டால்
போதுமிதுவேபத்தியம்புகலுவாயே. (கூஅ)

## வைத்தியர்கட்குப் புத்திகூறல்.

புகலுகின்றகணத்துநிதானந்தான்சொல்லப்
பூரணமாயெவருக்குந்தோன்றுதென்று
மகிழுகின்றதிரவியத்தில்லாசையற்று
மனதிலுதித்ததுவாக்கிலுரைத்துவாழுஞ்
சகலகுணவல்லவனுய்த்தெளிந்துசொல்வன்
தன்னறிவிலுயர்ந்தோனுந்தொன்னூலாய்ந்தோன்
இகந்தனிலின்னோர்க்குள்ளங்கையினெல்லி
யெனத்தோன்றிப்பலிக்குமிதிலினிதுண்டாமே. (கூக)

## ஆம தோகலட்சணம்.

உண்டபாலுமெதிரெக்குமுடம்பும்பற்பலவிதந்தோன்று
மண்டவயிற்றிற்கனமுண்டாயதிகச்சுரமுமொழிசிறுக்கும்
விண்டமலத்தைக்கட்டிவிடும்விழியும்வளைந்துகால்குளிரும்
துண்டமானவாமமென்றேதோன்றிமருந்துசெய்வாயே. (க00)

## ஷ வியாதிக்கு மருந்து.

செய்வாய்வேம்புமாவிலிங்கைசிவதைகிளுவைசரக்கொன்றை
மைவாய்புரசுபிரண்டையுத்தாமணியுங்கடுக்காயிலக்கள்ளி
கொய்வாய்பிரமிதோகணியுங்கொடியமிளகுநிலாவாரை
யைவாம்வெள்ளெச்சாரணைத்தூணல்கவாமம்பறந்திடுமே. (க0க)

## நீராம தோகலட்சணம்.

பறந்துசீதத்துடன்மஞ்சள்பச்சைநீராய்த்தான்கழியுஞ்
சிறந்தகண்ணில்பீளையுண்டாந்திருகிவலிக்குமுடம்பெங்குந்
திறந்தகண்ணும்வளையமிடும்தேகமெல்லாம்வேர்த்துவிடும்
நிறைந்தமூக்கில்சலம்பரியும்நீராமத்தின்குணமிதுவே. (க0உ)

## ஷ வியாதிக்த மநந்து.

இதுவேபுரசுபாவட்டையிலையின்கள்ளிகருஞ்சீரி
வதியும்பிரமிவசம்புவுத்தாமணிகாக்கரட்டான்மூக்குரட்டை
சதமாய்வெதுப்பையடக்கிகரிசலாங்கண்ணிசாரணைவேர்
நிதமாயோமங்குடிநீர்கொணீராமந்தானின்றிடுமே. (கஅஈ)

## போராம ரோகலட்சணம்.

நின்றவயிறுபொருமிப்போநெற்றிநரம்புபுடைத்திருக்குங்
கன்றிவயிற்றில்வலியுண்டாய்க்கைகால்குளிர்ந்துதலைவலிக்குந்
துன்றும்வாந்தியரோசகமுஞ்சோருமார்பையிடித்திடுநொள்
சென்றுவரும்போராமத்தின்செயலாமென்றுதேர்ந்தறியே. (கஅச)

## ஷ வியாதிக்த மநந்து.

அறிவாய்பஞ்சதிரவியமுமரிசியுடையதிப்பிலியுங்
குறியாய்வகைக்கொன்றிரண்டுநிட்கங்குணமாயவரிச்சாற்றனைத்து
நிறையாய்க்கால்சேர்தனையருந்தநில்லாதோடும்போராமம்
வெறிகொள்கரியகுழலாளேவேதமுரைத்ததிப்படியே. (கஅடி)

## சுரவாம ரோகலட்சணம்.

படியேபிதற்றுந்தலைவலிக்கும்பாங்காய்நெஞ்சுங்குலவற்று
மடியாம்வயிறுகனத்திருக்குமடிக்குந்தாபசுரமிகுந்து
வடிவேல்கண்ணும்வெளுத்துவருமலத்தைக்கட்டிக்கால்குளிருந்
துடியாஞ்சுரத்திலுமமென்றேசொல்வார்கலைகளுணர்ந்தோரே. (கஅசு)

## ஷ வியாதிக்த மநந்து.

உணர்ந்தகருகுரோகணியுமுத்தாமணிமாம்பழக்கொன்றை
யிணைந்தகண்டங்கத்தரியுமிலையின்கள்ளிகாக்கரட்டான்
பனையும்விஷ்ணுகரந்தைசுக்குப்பகரும்வெண்சாரணையுடனே
புணர்ந்தகருஞ்சீரகங்குடிநீர்புகட்டசுரவாமம்போமே. (கஅஎ)

## சன்னியாம ரோகலட்சணம்.

சுரமும்வலிப்புங்குறல்கம்முஞ்சூழ்ந்தவயிற்றிலதைப்புண்டாம்
கருதிமலமும்தீய்ந்துவிடுங்கால்கைகுளிர்ந்துதாகமுண்டா
முரியமயக்கம்வேர்வையதாமுதகெருத்துமுகம்வேரு
யருசிமிகுந்துகாணுமெனிற்சன்னியாமமென்றுகொள்ளே. (கஅஅ)

## ஷ வியாதிக்த மநந்து.

கொள்ளேமுருங்கைமாவிலிங்குகொடியவேளையிலைக்கள்ளி
வெள்ளேயானசாரணைதான்மிகுந்தகண்டங்கத்தரியுந்
துள்ளுஞ்சுதப்பழக்கொன்றைசுரசத்துடன்கஸ்த்தூரியிட்டே
யுள்ளுக்கருந்தப்பறந்துநில்லாதோடுஞ்சன்னியாமமதே. (கஅசூ)

சன்னியென்பதெல்லாந்தான்சள்ளேமெத்ததோற்றுவிக்கு
முன்னியுணர்ந்தேயுகமுடனுற்றவியாதிதனேயறிந்து
மன்னியதற்குத்தக்கபடிமருந்துகொடுத்துத்தணிந்தபின்பங்
கென்னகொடுத்தாலுஞ்சிறிதென்றெண்ணப்பலிக்குங்கண்மணியே. (கஈ0)

## மஞ்சட்காமாலே ரோகலட்சணம்.

கண்ணுடன்சிறுநீர்நாக்குகனக்கவேமஞ்சட்போலா
மெண்ணியசுரங்கள்வாந்தியெடுத்திமேயக்கமூதல்
வண்ணமாய்மூக்கினீரும்வடிந்திடும்வயிற்றிலேபாம்
நண்ணுமஞ்சட்காமாலேநாடியகுணங்கள்தானே. (கஈஈ)

## ஷ வியாதிக்த மநந்து.

குணத்தொடுகீழாநெல்லிகூறுபொற்றலைக்கையானு
மணத்தவெள்ளாட்டிலத்திவளர்ந்தயாமணக்குசுக்கு
பணைத்திடுமுடக்கொற்றானும்பாகமாய்க்குடிநீர்கொண்டா
லிணைத்தமஞ்சட்காமாலேயேகும்பாலன்னங்கொள்ளே. (கஈஉ)

## ஊதுகாமாலே ரோகலட்சணம்.

கொள்ளவேபசிக்குமுப்பும்கொடுஞ்சீதம்வயிறுபோகுந்
தள்ளவேமயக்குங்காதைத்தடையுறவடைக்குங்கண்தான்
வெள்ளேயாய்வெளுத்துக்காணும்வெதும்பியேயூதலாகு
முள்ளமேயிளேப்பாய்த்தோன்றுமூதுகாமாலேயெண்ணே. (கஈஊ)

## ஷ வியாதிக்த மநந்து.

மாலேசேர்முடக்கொற்றான்வேர்வழுக்கைநீர்ச்சண்டிசுக்கு
சாலநீர்முள்ளிதானுஞ்சங்கொடசெங்கங்குப்பிக்
கூலமாங்கண்டக்காலிகொடுத்திடுகுடிநீராக
ஞாலமிட்டலறியோடுமூதுகாமாலேயாமே. (கஈசு)

## சூலுவயிற்றுக்கீரிப்பூச்சிரோகலட்சணம்.

ஆகுமேவயிறுபேதியடிவயிற்பிரட்டலுண்டாந்
தேகமேகாஷமன்னத்துவேஷமுங்காய்ச்சலாகும்
வாகுசேர்வாந்திநெஞ்சுமார்புமேடிட்டுவேற்கு
மேகுமேவயிறுசூலுமிவைகீரிப்பூச்சித்தானே. (௬௬௫)

## ஷை வியாதிக்கு மருந்து.

பூச்சுமாம்பழத்தின்கொன்றைபுளியெவட்சாரமிந்து
காச்சிடுங்கடுக்காய்ரோணிகலந்துகும்மட்டிக்காய்க்குள்
பாச்சிமாட்டின்காற்கீழேபதித்தொருபகலுஞ்சென்று
வாய்ச்சமுத்தெண்ணெய்தன்னில்வகையுடனரைத்துட்கொள்ளே. (௬௬சு)

## அசரிப்புழு ரோகலட்சணம்.

அசைக்குமாசனத்தில்மெத்தவரிப்புண்டாமருசிகாணுங்
கரைத்திடுஞ்சரீரந்தன்னைகழிந்திடுஞ்சீதந்தண்ணீர்ச்
சுருக்கியேமலத்தையுண்ணுந்தொப்புளிலரிப்புண்டாகும்
புரக்குமாயிழையாயசரிப்புழுவெனவறிந்துகொள்ளே. (௬௬எ)

## ஷை வியாதிக்கு மருந்து.

அறிந்தெலிச்செவிகடுக்காயானமுள்முருங்கைதான்றி
செறிந்தாமலகமைந்துஞ்சேரவேகுடிநீர்வைத்துச்
சிறந்தவல்லிசம்விளங்கஞ்சிதைத்துமேன்பொடிகள்தூவிக்
குறைந்திடாதருந்திற்பூச்சிக்கூண்டறும்குடிநீர்க்கெண்ணே. (௬௬அ)

## மதுராசுர ரோகலட்சணம்.

எண்ணுமொன்றிரண்டுமூன்றுமேழுடன்மூன்றுளிற்
கண்ணியேசுரங்களாகுங்கழுத்தினிற்கொப்பளிக்கும்
புண்ணியமுகம்வெளுக்கும்போக்குபல்விதமாம்நெற்றி
வண்ணமாய்க்கழுத்தும்வேர்க்குமதுராசுரமென்றுகொள்ளே. (௬௬சூ)

## ஷை வியாதிக்கு மருந்து.

என்றசிற்றரத்தைசுக்குமெழிலுறும்விஷ்ணுகாந்தி
மூன்றுபற்படகம்சிற்றமுட்டிகோரைக்கிழங்கு.
வென்றிமெருதம்பட்டைவேம்பின்தோல்குடிநீர்வைத்து
தென்றுரோசனையிட்டுண்ணிற்சுரமதுதுலைந்துபோமே. (௬௭0)

## தளிர்சன்னி வாதரோகலட்சணம்.

தலைவிலாவயிறுமூப்பிச்சுரத்தொடுவேர்வைதாழ்வாய்
வலியொடுமிரத்தசிதமாகவேவயிறுபோகு
மலையுங்கால்கரங்குளிர்ந்தடிவயின்வலித்துப்புண்ணுங்
குலைசெறிவாந்தியானற்குளிர்சன்னிவாதமாமே. (கஉக)

## ஷை வியாதிக்த மநந்து.

வாதுதிப்பிலியாத்தைவளைந்தபேய்மிறட்டிசுக்குத்
தூதுளையக்கிரகாரந்துளசிவிஷ்ணுகரத்தை
சீதளவெதுப்படிக்கிசிற்றரமுட்டியும்வேப்பந்தோ
லீதெலாம்குடிநீராக்கியிதில்கோரோசனையுங்கூட்டே. (கஉஉ)

## அலத்திடுசன்னி ரோகலட்சணம்.

கூட்டங்கண்டெழுந்திருக்குங்குளிரும்வாய்பிதற்றலுண்டாம்
வாட்டமாயிளைக்கும்வேர்க்கும்மதிமுகம்வெளுக்கும்பேய்போல்
தேட்டமாய்வார்த்தையுண்டாஞ்சிரில்லாமூச்சுண்டாகு
மாட்டமாஞ்சரீரந்தானுமலத்திடுஞ்சன்னியாமே. (கஉங)

## ஷை வியாதிக்த மநந்து.

சன்னவெற்றிலைசுக்கோமஞ்சாற்றுமாவிலிங்குகொச்சி
துன்னியவக்கிரகாரஞ்சுழ்முருங்கையுமெருக்குந்
தின்னுஞ்சிற்றரத்தைகண்டங்திப்பிலிகறுக்கிவாங்கிப்
பன்னுமிச்சுரசத்தாமைபற்பமுங்கலந்துவாரே. (கஉச)

## சுக்துவ ரோகலட்சணம்.

வார்செறிவிலாவில்மார்பில்வந்திடுங்கோழைநெஞ்சிற்
சாரவேசெனிப்புண்டாகிச்சளியொடுபுகைச்சலுண்டாம்
மூரலேயிருமலாகியுண்டிருஞ்சோறுங்கக்குங்
காரமாயிளைக்குமேனிசுக்குவான்குணமிதாமே. (கஉடு)

## ஷை வியாதிக்த மநந்து.

தாமினிம்பூரல்தும்பைசாரடைகழற்சிவேறுக்
தூமிருகரங்தைகார்த்தத்துளசிதுதுவேயழிஞ்சி
நாமதேன்கொக்கிவட்டங்கிலுப்பையும்சன்னீராக்கி
வாமையின்பற்பங்கூட்டியதில்வசம்பூருத்தவோதே. (கஉசு)

## இளம்பிள்ளை வாதரோகலட்சணம்.

ஓதியவழலைதாகமுடல்வலிகடுப்புக்கீலில்
வாதனைநடுக்கல்சோம்பல்வளைத்துமெய்நரம்பிழுத்தல்
மாதுநல்லாயரோசிமலபந்தம்கால்கைசோம்ப
லீதிவைகுணங்கள்கண்டாலிளம்பிள்ளைவாதமென்றூர். (கஉஎ)

## ஷை வியாதிக்கு மருந்து.

என்றிருகழஞ்சிநொச்சியிலைக்கள்ளிதிருகுகள்ளி
குன்றிமாவிலிங்குவேம்புகொடிவேலிவேளைமேனி
வென்றிடுங்கழற்சிதோடைமிகுதழுதாழைசீந்தில்
துன்றியோர்வேதுசெய்தால்தொலைந்திடும்பிள்ளைவாதம். (கஉஅ)

பிள்ளைநோயனந்தமுண்டுபெருகியதிலேபேத
மொள்ளியவுணர்ந்தோர்க்கல்லாலொருவருமறியமாட்டா
ரெள்ளினுள்ளெண்ணெய்போலிருக்குமெய்யெங்குநோய்தான்
கள்ளவிழ்குழலிளைகருத்துடனறிந்துபாரே. (கஉகூ)

பார்த்ததாலலகைசேருமென்றுமுன்பகர்ந்தீரந்த
வார்த்தையைவிபரமாகவகைபிரித்துரைப்பீரென்ன
சேற்றிதழ்க்கமலமன்னமுகத்திளைய்தெளிவாய்க்கேளென்
றேற்றமுன்னுதிதன்னையியல்புடனியம்புவேனே. (கஙo)

இயம்புமாய்ப்பாடிதன்னிலினியநல்லசோதையில்லில்
நயம்பெறுமேகவண்ணன்நவினிலுதித்தன்னுள்
புயந்தனைப்பற்றிவாங்கிப்பூதகிமார்பைவவ்வுங்
குயந்தனையதரத்தூட்டுங்கொள்கையிவ்வுலகமென்றூர். (கஙக)

உலகினில்கருவில்தானுமுதித்தனுள்தொட்டனந்த
மலகைகள்சேரும்நீரியதுமுதலாதியாகப்
பலவிதகுணங்கள்செய்யும்பண்பினுலறிந்துசாந்தி
குலவியசிகிச்சைசெய்தால்தீர்ந்திடுங்கொற்பக்கோளே. (கஙஉ)

---

## அலகைக்காண்டம்.

இதில் கருப்பஸ்திரீகளுக்கு க - முதல் க0 - வது மாதவரையில் ஒவ்வொருமாதமும் அவர்களுக்கு நேரிடும் அலகைதோஷம், அதனதன் லட்சணம், சாந்தி, சிகிச்சை ஆகியவைகளும், குழந்தைபிறந்தநாள்முதல்பதினாறுவதுநாள் வரையில் ஒவ்வொருநாளும் அதற்குநேரிடும் அலகைதோஷம், அதனதன்லக்ஷணம், சாந்தி, சிகிச்சை ஆகியவைகளும், தாய்க்கும் பிள்ளைக்குஞ் செ ய்யவேண்டிய சில முக் கியசிகிச்சாக்கிரம முறை முத லியவைக ளுஞ்சொல்லப்படும்.

---

### முதலாவது மாதம்.

### வே று.

கெர்ப்பந்தான்தோன்றியதோர்திங்கள்தன்னில்கெடியானசிவிலியென் றவலகைசேரும், அற்புதமாங்கர்பத்தையுதிரமாக்குமதின்பெலியுமருந்தா னறியச்சொல்வேன், நுட்பமதாயரிசிமஞ்சட்சுண்ணம்பிட்டுநண்மையாய் பிசரிநாற்சந்திவைப்பாய், கற்பவிதிவனசகந்தம்விலாமிச்சம்வேர்காராவின் பால்கூட்டிகலந்துட்கொள்ளே. (க)

### உ-வது மாதம்.

கொள்ளவேயிரண்டுதிங்கள்தன்னிற்பெண்ணேகூறுகிறேன்கிரந்தியெ னும்பேய்தான்சேர்ந்து, தள்ளுமேபிண்டத்தையுதிரமாகத்தானதற்குப்பெலி யுதிரஞ்செம்பூசேர்த்து, மெள்ளவேநாற்சந்திவைக்கமீளும்வினையிருந்தாற் செங்கழுநீராம்பற்கொட்டி, விள்ளுமிந்தகிழங்கெடுத்துப்பாலிற்சேர்த்துவெ ருகடிதானஞ்மூன்றுமருந்தப்போமே. (உ)

ஈ-ச-வது மாதங்கள்.

போகுமூன்றுந்திங்கள்வறனைப்பேய்தான்பொல்லாதுகைகாலைநடுக்கு
ஞ்சோம்பல், ஆகும்பல்விகாரமாம்பலியாழாக்கரிசிபருப்புடன்பாற்சோறுக்
கிப்பிண்ட, மாகவேசெய்துபொரிபொரிநீருந்தானையளரைச்சேவித்ததன்
பேர்கூவி, யேகவேயிரவில்வைக்கத்தீரும்பெண்ணேயின்னமதற்கவுடதங்க
ளியம்புவேனே. (ஈ)

இயம்பக்கேள்தாமரையின்வளையமல்லியின்கிழங்குசெவ்வளனீ ரிட்ட
ரைத்து, நயம்பெறவேயாவின்பாற்கூட்டிமூன்றுநாளருந்தத்தீருமினிகாலா
மாதம், பயங்கரமாய்வடியென்னும்பேய்தான்சேரும்பருத்ததொருகீழ்வயிறு
நொந்துகாணும், மயங்கிவருஞ்சீதமாம்வயிறுபோகும்மடமயிலேபெலியதற்
குவகுக்கிறேனே. (உ)

வகுக்குமுழக்கரிசிகற்கண்டுசினிவா கெருமைப்பால்கூட்டி யன்னமா
க்கி, பகுத்துமூவிதமாக்கறிசமைத்துப்பாங்கானகாளிகோயில்முன்வையே,
தகைபெரியவயிற்றுநோயிருந்ததாளல்தாமரையின்கிழங்கும்வாழைக்கிழங்கு
ம், நகைசெறியுமிளமானேபாற்குழம்புமூன்றுகவரைத்துரீகுடித்திடாயே.

ரு-சு-வது மாதங்கள்.

குடிக்கவேயஞ்சுதிங்கள்பூக்காளிப்பேய்க்குணம்வயிறுமூறுக்குமேற்றலை
லைக்காடா, மிடிக்குமுத்தக்காசுசெங்கழுநீர்கோஷ்டமினிதானவதிவிடை
யங்கிராம்புமாக, வடிக்கட்டிவென்னீரிற்கொள்ளத்தீரும்வாகானவாறுதிங்கள்
செத்தவகைப்பேய்தான், துடிக்கவொருபெலியரிசியாட்டுப்பாலுஞ்சோறுச்
கிச்சாராயங்கூட்டிச்சொல்லே. (சு)

சொல்லவேயெம்பெருமாள்கோவிற்சென்றுசூக்ஷமாய்வடக்கில்வைக்க
த்தீருந்தீரும், சல்லியமாய்வயிறுவலியிருந்துசாலுல்தப்பாமலரசடியின்மண்
ணுங்கொண்டு, துல்லியமாஞ்செங்கழுநீரிலையுமோருஞ்சுகமாகவருந்திலுற்
றுலந்துபோகும், மெல்லியலேயேழுதிங்கள்குணத்தைநன்றுய்விளம்புவே
னுலகறியவிளம்புவேனே. (எ)

எ-வது மாதம்.

விளம்புவேனிரகுதியென்றவலகைசேருவியஞ்சுவடம்பெல்லாநடுக்கங்
ணும், தளம்பவேபெலியரிசியறெள்ளோடுசாதகமாயாவின்பால்மேதிப்பா
லும், வளம்பெறவேசோறுக்கிக்காளிகோயில்வைத்திடுபேய்கூவிப்பின்வன
சத்தோடும், களங்கமிலாச்செங்கழுநீரிலாமிச்சம்வேர்கனத்தசுழலாவாரை
இப்பிலியுண்ணே. (அ)

## அ-கூ-கo-வது மாதங்கள்.

உண்ணவிருநாலுதிங்களுண்டிப்பேய்தானுரத்திற்பிண்டத்தைநோகச்
செய்யுந், திண்ணமதாயுளுத்தஞ்சோறுச்சிப்போதில்திடமாய்நாற்சந்தியி
லேவைக்கமீளும், வண்ணமதாயொன்பான்றிங்களிலேபேய்தான்வளமான
வன்னம்போலருகேநிற்கும், துண்ணெனவேபேர்வெட்டிதகடியாகும்சூட்ச
மாயதின்குணத்துநியமங்கேளே. (கூ)

நியமமதாயிருபத்துயேழுநாள்தானிச்சயமாய்க்குழந்தைபிறப்பதுபோ
ற்காணும், வயமதாய்மருந்துகொட்டிக்கிழங்குகொண்டுமகத்தானகாரைவேர
த்திப்பட்டை, தயவாகயிதையரைத்துப்பசுவின்பாலிற்சாதகமாயுட்கொள்ள
த்தளர்ந்துபோகுங், கயல்பொருவும்நெடுங்கண்ணுய்ப்பத்தாந்திங்கள்கனத்த
தொருசூலயதாய்நோகுந்தானே. (கo)

தானிதற்குமருந்துகேளத்தித்தோலுந் தயவாகவரசுபிசினிரண்டுங்கூட்
டி, ஆனதொருபசுவின்பாற்கூட்டித்தின்னவலங்காரமாய்க்குழந்தைவெளி
யிற்றோன்றும், மானேயபார்வையிளும்பிறந்தபோதுமாதாவைச்சேர்ந்த
தொருநோய்தோஷப்பே, யானதெலாங்குழந்தையைவந்தடைந்ததென்னு
மாயுள்வேதப்பகுப்பிலறிந்துபாரே. (கக)

## குழந்தை பிறந்த க-நாழிகை.

### வேறு.

பார்செனித்ததொருநாழிகைச்சிறுகுழவிபார்வைவிழியாமலே
வீரெனக்கதறிடாதுதீபமதிலேசுழற்றிவலமாகவே
சீரியற்கையொசெற்றிஞல்விழிதிறந்துகத்துமிதுதிண்ணமே
காரிருண்டகுழன்மாதிரண்டநாழிகையிற்பேய்விதிகழறுவேன். (கஉ)

## உ-வது நாழிகை.

கழறுவேன்வெகுளியென்றபேயணையும்மேல்வெதும்புமதுகண்டபின்
தழைத்தகாணிக்கையுளுந்துசோறுசர்க்கரைகிழங்குதனைவைத்துபே
யழைத்துகந்திகெவென்றுமீளவதுதீருமிங்கிவைகளானபின்
பழுத்தசெம்பொன்கொவ்வாய்துடைத்துதரவுந்தியின்கொடிபறித்திடே.

இடுபலாவிலையுமத்திப்பட்டைசிறுவாமணக்கிலையிம்மூன்றுமே
விடுகுடஞ்சலமெரித்தெழிற்குழவிநீரிலாட்டிவிடுமெல்லிதாய்ப்
படியபூத்திலதமிட்டுவேப்பிலைபரித்தடித்துவையிறப்பிலே
கொடியின்கள்ளியொடுவெற்றிலைச்சுரசமாயிரண்டுவகைகூட்டிடே. (கச)

## தாய்க்குக் காயமருந்து.

கூட்டுகாயவகை தாயவட்குவேர்க்கொம்பு திப்பிலிகிராம்புடன்
வாட்டமில்லதொருமோதகம்பெரியகாயமாமிளகுமஞ்சளுந்
தேட்டமுள்ளதொருகண்டுதிப்பிலிசிற்றறத்தையிவையொன்பது
வோட்டுசெந்தணல்வெதுப்பியிவ்வெடையுரித்துசேர்த்திடுவெள்ளுள்ளியே.

உள்ளிசேர்த்தநிற்பாதியிடைகருப்புட்டியிட்டதுபிசைந்துதாய்க்
கொள்ளமெய்யலேசலானவேதனைகள்கொடியநீர்மலக்கட்டுகள்
வள்ளமாமுலையிற்பாலுரைந்திடுதல்வாதமோடுசிழ்நீர்கபம்
விள்ளுமேலினிச்சிறுகுழந்தைநோய்விளம்புவேனடிகன்னியே. (கசு)

## குழந்தை பிறந்த முதல்நாள்.

### வேறு.

கன்னிகையேமுதலுளிற்கஞ்சகப்பேய்சேருங்கருவருந்திநாற்றமதை
யிரையாயுண்ணுங், தன்னிமையாம்பிள்ளையதுசவத்தைப்போலாஞ்சற்றுமு
லையுண்ணுதுமலம்விடாது, இன்னவிதங்கண்டாக்கால்பொரியும்நீருமினிமா
வாலுருவாக்கிமாலைப்போது, அன்னவன்பேர்கூவிவைக்கத்திருத்தீருமிதுவ
ன்றியின்னமுந்தான்அறையக்கேளே. (கஎ)

## உ-ஈ-வது நாள்கள்.

அறையக்கேளிரண்டாளுள்பச்சைப்பேயாலதிகமாய்விழிமிரளவெருவி
லேக்குந், துறையாகவுளுத்தஞ்சோறுக்கிப்பேய்பேர்சொல்லிமாலையின்போ
துசந்திவையே, முறையானமூன்றுநாள்பேய்தானீசன்முலையுண்ணுதெதிரெ
க்குஞ்சிறிவிக்குங், குறைவில்லாவுளுத்தஞ்சோறெள்பொடிதான்சேர்த்துக்
கோழிபெலியிட்மாலையிற்றுன்வையே. (கஅ)

## ஊ-வது நாள்.

வைக்கவேலாளுள்குமட்டிப்பேய்தான்மார்புகைகான்மேல்வெதும்பு
ஞ்சிறிவிக்கும், அக்கணமேபொரியும்பொரிநீருந்தானேயாக்குளுத்தஞ்சோறு
பிண்ணுக்கிலையுங்கூட்டி, சக்கியமாயகலில்வைத்துக்கையால்தீண்டிசவஞ்சு
கொடதிற்பேயைக்கூவிவையே, மைக்குழலாரகன்றவிழிமாதேயிந்தவகைய
றிந்துபெலிகொடுத்தால்வாங்கிப்போமே. (கசு)

### ரு-வது நாள்.

வாங்குமைந்தாளுளதனிலஞ்சவிப்பேய்நின்றுமலங்கழியவொட்டாது மூறுக்குஞ்சீறும், தூங்குமூடம்பாதியந்தம்வெதும்பிக்காட்டுஞ்சுகமாகவுளுத் தஞ்சோறுமெய்கூட்டி, யாங்குமிலகறிபொரியும்பொரிநீர்சேர்த்தகலிலிட்டு வூர்நடவின்மாலைப்போது, சாங்கியமாயவள்பேரைக்கூவித்தானேதனிச்சே வற்பெலிகொடுத்தாற்றீந்துபோமே. (உ0)

### கூ-வது நாள்.

தீர்ந்துபோமாறுளஞ்சிப்பேய்தான் செயுங்குணங்களைதிரெடுக்குமூ லையுண்ணுது, நாந்துகைகால்வலியெடுக்கும்வெதுப்புச்செய்யும்நல்லபச்சரிசி புண்ணுக்குளுத்தஞ்சோறு, சேர்ந்தபொரிபொரிநீருமசலில்வைத்துத்தீபமிட் டுச்சுடுகாட்டிற்கொண்டுபோய்தான், சாந்தமுடனஞ்சியென்றுபேரைக்கூ விசாப்பிடென்றுவைத்திடவேதீருந்தானே. (உக)

### எ-வது நாள்.

தீருமேழாநாள்செவ்வாய் நகைப்பேய்சேரும் வயின்வலியெடுக்குமூலையு ண்ணுது, கூரியதாயெதிரெடுக்குஞ்சீறிவிக்குங்குணமாகபெலியதற்குவெண் சோறுக்கி, நாரியேபஞ்சவண்ணச்சோறுஞ்செய்துநலமாகமண்ணகலில்வை த்துக்கொண்டு, காரியமாய்ச்சந்தியிலேமாலைப்போதுகருங்கோழிபெலிகொ டுத்துக்கண்டுகொள்ளே. (உஉ)

### அ-வது நாள்.

கண்டுகொள்வாயெட்டாநாள்திண்மைப்பேய்தான் காலுடம்புங்கையெ ங்கும்வீக்குஞ்செய்யும், பண்டுபோலெதிரெடுக்குஞ்சீறிவிக்கும்பாதாதிகேசமூ தல்வெதும்பிக்காட்டும், வென்றிசேரெள்ளுபொடிபொரிநீரும்பொரியும்மே லானதேனோர்சொட்டகலிலிட்டு, கண்டிதமாய்ச்சுற்றியெறிந்திடவேதீருங் காரிருண்டகுழன்மாதேகருத்துட்கொள்ளே. (உங)

### கூ-வது நாள்.

கருத்திற்கொள்ளொன்பாநாள்தட்டிப்பேய்தான் கனமானவுடம்பெல் லாம்வெதும்பிக்காட்டும், வருத்தமாய்மேல்வீங்குமூலையுண்ணுதுவாயினிற் குடித்தபாலெடுக்குஞ்சிக்குந், திருத்தமாய்க்குளத்தின்மண்குயவன்மண்ணு ஞ்செவ்விதாயுருச்செய்துமைப்பொட்டிட்டுப், பொருத்தமுடன்பொரிபொ ரிநீருளுத்தஞ்சோறும்புதுநெய்யுமாலையிலேகூவிவையே. (உ.ச)

## கo-வது நாள்.

கூவவேபத்தாநாளுகண்டியென்னுங்கொடியபேய்சேரும துலெதும்பி க்காட்டும், பாவனையாய்ப்போதாட்டும்மூலையுண்ணுதுபகருளுத்தஞ்சோறுபி ண்ணுக்கிலையுங்கூட்டி, மேவுபொரிபொரிநீருமகலிலிட்டுவியனுச்சிப்போதி னின்முச்சந்திவைத்துத், தாவியவள்பேர்கூவிப்பெலியீந்தாக்காற்சாதகமாய் ப்போகுமிதுசகசந்தானே. (உரு)

சகசமாயோமத்தையரைத்துக்கொண்டுதாயினுக்குத்தலைதனிலேதட விவெந்நீர், வகையுடனேவேப்பிலையும்போட்டுக்காய்ச்சிவளமாகநீராட்டிக்கி ரகந்தன்னைச், சுகமாகவேதியராற்சுத்திசெய்தாற்சூழ்வாதபித்தகபமிதமாய்நி ற்கும், மகிழ்சாந்தியதனுலேயசூசியானவன்பசாசுகள்மிதமாம்வளங்கடானே.

## கக-வது நாள்.

வளங்கொள்பதிலேழுநாள்கவடிப்பேய்தான்வாயில்மூலவையாதுவெ தும்பும்வீங்கும், களங்கமுடனெதிரெடுக்குமெலிந்துபோகுங்கைவழியாய்க் குயவன்மண்குளத்தின்மண்ணு, முளங்களிக்கவுருச்செய்துமையுமிட்டங்கு ற்றபொரிபொரிநீருமுளுத்தஞ்சோறுந், தளந்தமடியாவினெய்மாலப்போ திற்சந்திதனில்வைத்திடவேதையங்கிப்போமே. (உஎ)

## கஉ-வது நாள்.

தயங்கியேபனிரண்டாநாளில்வந்துசண்டியெனும்பேய்சேரும்வயிறு வீங்கும், மயங்குமேல்வெதும்புமதுவாந்திசெய்யும்வாயினூற்குடிச்தபாலெடு த்துப்போகும், வியந்தபொரிபொரிநீறுமேன்தூளிட்டுமெய்ம்மூலப்பாற்ப ஞ்சவர்ணச்சோறுஞ்செய்து, தயந்தபுண்ணுக்கிலையுடனேயகலிலிட்டுநன்று கமாலையிலேகாட்டிற்போடே. (உஅ)

## கஙு-வது நாள்.

போடவேபதிமூன்றுநாளில்வந்துபுகழ்கள்ளச்சந்திப்பேய்ப் பொருந்த சேரும், நீடியதோர்வயிறுகழியும்வாந்தியாகும்நீதியில்லாப்பலவிகாரங்கள் செய்யுங், கூடியதோர்பசுவின்பாலுளுத்தஞ்சோறுங்குணமானவெண்ணெ ய்புண்ணுக்கிலையுங்கூட்டித், தேடுபொரிபொரிநீர்கருப்புட்டியிட்டுச்செயமா ங்கூபக்கரையில்மாலைப்போதே. (உகூ)

## கச-வது நாள்.

போதுபதிநாலாளுள்செம்மண்டைப்பேய்பொருந்தும்வயிற்போகும்பா லெடுத்துப்போடுந், தீதுபெறமேல்வெதும்புமழுதகத்துஞ்சில்லரையாய்வி

காரங்கள்செய்துகாட்டும், மாதுகல்லாயுளுத்தஞ்சோறடைபாலிட்டுவகையா னவிலக்கறியுமகலிலிட்டுச், சூதுபெறுமலகையின்பேர்கூவிக்கொண்டுசுக மாகவந்திதனிற்காட்டில்லையே. (கூ ஏ)

## கடு-வது நாள்.

காட்டுகிறேன்பதினேந்தில்மலகனென்னுங்கனத்தொருபேய்சேரும் விக்கல்காணும், வாட்டுமுடல்வெதும்பியேமலத்தைப்போக்குமகத்தான சன்னியுண்டாம்பசுஷிதோஷம், மேட்டிமையாய்ச்சேருமதுமூலையுண்ணுது வெண்ணிறமாய்நீர்போலேகழிச்சலுண்டாந், தாட்டிகமாய்க்கத்துமதுமாந்து ஞ்சோருந்தப்பாமலதிரெடுக்குந்தூங்குந்தானே. (கூ க)

தூங்காமற்பெலிகேளுளுத்தஞ்சோறுஞ் சுகமாகவோட்டப்பம்பாலிலு டை, வாங்குபொரிபொரிநீருமகலிலிட்டுமோலயிலேபேர்கூவிநீரோரத்திற், சாங்கியமாய்ப்பெலிகொடுத்துவைத்தாயாளுற் சாதகமாய்ப்போகுமிந்தச்சாந் திக்கெல்லாம், பாங்காகக்கோழிபெலிகொடுத்துவைத்தால்பட்சியொடுபேயெ ல்லாம்பறக்குந்தானே. (கூ உ)

## கசு-வது நாள்.

பறக்குமீரெட்டிலேவகைப்பேய்சேர்ந்துபருவமாய்வீங்குமதுபருப்புஞ் சோறும், வறுத்தபொரிபொரிநீருங்கீரைசுண்டிமண்ணகலில்வைத்தவள்பே ர்சொல்லிக்காட்டில், பிறைக்கொழுந்தங்குதிக்குமுன்னேயந்திதன்னிற் பெலிகொடுத்துவைத்திடவேதீர்ந்துபோகுஞ், சிறக்குமன்னேதனக்குநீராட் டிவைத்துசெயமாகவன்றுமுதல்மருந்துகூட்டே. (கூ ஙு)

## வேறு.

### நடகாயம் செய்யும்விதம்.

மருந்துகேள்கோஷ்டம்வல்லிருசீரகந்
திருந்துசடாமாஞ்சிலுஞ்சாதிக்கா
யருந்துசிற்றரத்தையக்கிராகாரம்
பரிந்திசொதிப்பத்திரிதானிதே. (கூ ச)

தானேதுராலெபைசதகுப்பையோடு
மானேசன்னலவங்கப்பட்டையும்
பானிலவங்கப்பத்திரியேலம்
வான்பன்மூன்றும்வராகனிரண்டே. (கூ ஞ)

இரண்டுசெல்விழியாயிலவங்கப்பட்டை
திரண்டவாய்விளங்கஞ்சேர திமதூரம்
விரிந்தநன்னிவேருடனன்கும்
வருந்தியமூன்றுநிஷ்கம்வகைக்கே. (நசு)

வகைசெவியத்தோடுவளர்திப்பிலியுங்
தகுமிளகுங்குரோசானியோமங்கள்
மகிழவேநான்குவகையரைப்பலநேர்
துகையுடனேதான்சுக்குமுப்பலமே. (நஎ)

பலமதாளிசப்பத்திரியுடனே
சிலபுதுகண்டத்திப்பிலியிரண்டு
மூலியவகையொவ்வொன்றொருபலமாய்
கலமிகுகிராம்புநன்மோதகமே. (நஅ)

தகவிருவகையுஞ்சாரிநான்குநிஷ்கம்
புகழ்காட்டாத்திப்பூவும்விளாம்பிசின்
றிகழிவையிரண்டுஞ்சேரொருநிஷ்க
மிகழ்பகையில்லாதிருபத்தெண்வகை. (நசு)

எண்ணியமருந்தெடுதனித்தனியே
யெண்ணிமூன்சொன்னவெடைபிரமாண
மெண்ணித்தூளாயிடித்தொருமித்தா
லெண்ணறுநிஷ்கமும்பலமேழாம். (சம)

ஆலச்சர்க்கரைநாலெட்டுநிஷ்கங்
கோலப்பாகுசெய்தாலத்திட்டிதிற்
சாலத்தூளிதைமேலிட்டேகிளர்
சிலக்கழற்சியைப்போலுண்டைசெய்யே. (சக)

செய்துகொடுத்திடதீரும்வியாதி
மெய்யுளேச்சல்சுரம்விக்கல்தலைவலி
யையம்வாந்தியருசிபுண்தாகம்
பெய்யுநீர்க்கடுப்புரத்தபித்தங்களே. (சஉ)

தங்கியசீழ்நீர்சன்னிவாதங்கள்
மங்கதிசாரம்வாய்வுதிரட்சி
பொங்கியமூலம்புகழ்ஸ்திச்சுர
மிங்கிதமலசலமேகுமிதற்கு. (சங)

வேறு.

கள-வது நாள்.

ஏகுமேபதினேழில்தேர்மண்டைப்பேயெய்துமெலிவிக்குமழுஞ்சுரமு
மாகுந், தாகமொடுவெயிறுபோமுலையுண்ணுதுசலியாமலெதிரொடுக்குமுளுத்
தஞ்சோறும், பாகமாம்பருப்புபஞ்சவண்ணச்சோறும்பகர்பொரியும்பொரிநீ
ரோடப்பங்கூட்டி, வேகமுடனகலிலிட்டுத்தீபம்வைத்துவிரிவானகுளக்கரை
யிற்கூவிநாட்டே. (சச)

கஅ-வது நாள்.

காட்டவேபதினெட்டில்தேளுக்கிப்பேய்நயனமுள்ளாய்வயிற்கழியுஞ்சு
ரமதாகும், வாட்டுபிண்ணுக்கிலைபொரியும்பொரிநீரும்வெண்சோறுகன்னற்
கட்டிகருவாடுஞ்சேர்த்துத், தோட்டிவளர்சுடலைதனிற்பேயைக்கூவிச்சுந்த
ரமாம்கலில்வைத்துப்போட்டுமீளே, நீட்டியவீரெட்டுமூன்றுநாள்தன்னில்
நிகூயமாய்க்களுவென்றயலகைதானே. (சடு)

ககூ-வது நாள்.

அலகைசெய்யுங்குணங்கேளீர்வயிறுபோகுமருந்தாதுமுலைசற்றும்வெ
தும்புங்கக்கும், பெலியதற்குமாவிளைப்பாவைசெய்துபிரியமாய்ப்பொரிபொ
ரிநீருளுத்தஞ்சோறுங், குலவுநறுமகிழ்கந்தஞ்செம்பூசூட்டிக்கொண்டுகத
லிக்கனியுமகலிலிட்டு, நலமிகுத்தபிடாரிகோவிலிலேவைக்கநன்றாகும்நூல்வ
ழியேநடத்திப்பாரே. (சசு)

உ0-வது நாள்.

நடக்குமிருபதுநாளிற்சனியென்னும்பேய்நாடிலமுமுடம்பிளைக்குஞ்சு
ரமாங்கக்கும், வடக்குதிசைமண்ணெடுத்துப்பாவைசெய்துவளமானபாற்சோ
ற்றிவண்சோறஞ்செய்து, முடித்ததொருமூன்றகலில்மாலைப்போதில்மூன்று
திரிகொழுத்தியேகாளிகோவிற், குடதிசையில்வைத்திடவேதீர்ந்துபோகுங்
கொடியவேற்கண்மாதேகுறித்துக்கொள்ளே. (சஎ)

உக-வது நாள்.

குறியாகமூவேழிலானந்திப்பேய்குணங்கேளாய்வேற்குருவாம்போதாட்
டாகும், வெறியாகமுலையருந்தாதுடம்புகாயும்வெண்பொரியும்பொரிநீருங்
கோழியோடு, அறிவானதெற்குவழிதன்னிலேதானதிகமாய்நலஞ்சொரிந்து
வைத்தாற்றீரும், வெறிகமழுங்குழற்கருங்கட்செவ்வாய்சங்கமென்கழுத்துக்
கும்பமுலையிடைதான்மாதே. (சஅ)

## உஉ-வது நாள்.

மாதேகேளிருபத்திரண்டாநாளின்மகத்தானகெஞ்சியென்றபேய்தான் சேருஞ், சூதாகவெதும்பிவிக்குமழுதுகத்துந்தொந்தமாய்க்கண்ணிரண்டும்விழிக்கொட்டாது, மாதீபதூபமுடன்மாவிற்பாவைவளமானரொட்டி பொரி பொரிநீர்க்கொண்டு, வாதானசுடலேதனிலுச்சிப்போதில்வைத்திடவேதீர்ந்துவிடும்வழக்கந்தானே. (சசூ)

## உரு-வது நாள்.

வழக்கமுடனிருபத்திமூன்றுநாளின்மகாபாலனென்றெருருபேய் வந்துசேருங், கழிச்சலுடன்சோம்புதலும்வெதுப்புஞ்செய்யுங்கனத்தபொரிபொரிநீரும்பருப்புஞ்சோறுஞ், செழித்ததொருவெண்சோறுங்கந்ததூபதீபமுடன் சுடலையிலேபையைத்தானே, அழைத்தங்கேலந்தியிலேவைத்தாயாளையவமிருந்துணேய்களெல்லாமகன்றுபோமே. (சுo)

## உசு-வது நாள்.

அகலாதமூவெட்டிலிரத்தனென்னுமலகையதுசேருமிகத்தாகந்தோன்றும், பகர்ந்ததோர்கண்திஷ்டிபோலக்காணும்பலகாலும்வெதும்பியழுஞ்சுரமுங்காணும், மகிழ்ந்ததொருவெண்சோறும்பாற்சோருக்கிவளமானதயிர்கந்தந்தூபதீபம், புகலந்திநேரத்திற்சந்திலுலிற்புகழாகவைத்திடவே பிரிந்துபோமே. (சுக)

## உரு-வது நாள்.

பிரிந்தவிருபத்தைந்தில்கூவிணிகனென்றபேய்சேருங் குளிர்ந்திருக்கும் வெதுப்புஞ்செய்யும், பரிந்துசெத்துக்கிடந்தாற்போற்கிடத்திப்போடும்பலகாலும்வெவ்வேறுகுணத்தைக்காட்டு, மருந்திடும்வெண்சோறெருமைத்தயிருங்கொண்டாட்டியதோர்நல்லெண்ணெயுடனேசேர்த்துக், கரிந்தமயானக்கரையிலந்திப்போதுக்கலந்துவைக்சத்தீர்ந்துவிடுங்கயற்கண்மாதே. (சுஉ)

## உசு-வது நாள்.

கண்டயிருப்த்தாறிற்சம்பார்வந்திகாட்டியதோர்குணங்கேளாய் வயிறு போகும்,வண்டுவிழிகுளிந்திருக்குஞ்சிறிக்கும்பார்க்கும்மாவிலைற்பாவைபண்ணிசாந்துமிட்டுக், கொண்டவகிற்சந்தனமும்பூவுஞ்சூட்டிக்குளிர்கந்ததூபதீபங்கொடுத்துப், பண்டெருப்புஞ்சோறுநெய்பால்விட்டுப்பாங்காகக்கூவிவைப்பாய்மாலைப்போதே. (சுங)

## உஎ-வது நாள்.

மால்சிறந்தமூவொன்பாளிற்றூனேமகத்தானசோதியென்னுமலகை சேரும், வேல்சிறந்தவிழிதிறவாமயக்கமுண்டாம்வேதனையாய்க்கொட்டாவிமிகவுமுண்டாம், பாலுஞத்தஞ்சோறுடனேகோழிபெலியிட்டுப் பாங்காக சோதியென்னும்பேயைக்கூவிச், சிலமுள்ளகுழந்தைதலைச்சுற்றிவிட்டுத்தீபமிட்டோர்கடிகைபின்புசெலுத்துவாயே. (நிசு)

## உஅ-வது நாள்.

வாயிருபத்தெட்டினிலேமுகத்யனென்னுமகத்தானவலகையுறுமெதிரெடுக்குந், தோயுமிருகண்திறவாதழுதுகத்துந்துய்யவெண் சோறுளுத்தஞ்சோருடனேசேர்த்து, ஆயுமெருமைத்தயிரிற்குழைத்துமொத்தையாக்கிவிளக்கிட்டுவொருகடிகைபின்பு, பாயுமொருகோழிபெலியிட்டுக்கூவிப்பாங்காகச்சுடலையிலேயெறிந்திடாயே. (நுரு)

## உசு-வது நாள்.

எறிந்தயிருபத்தொன்பாளிற்குக்கடனென்னும்பேய்சேருமதுவயிறுபோகும், முறிந்துபாலெதிரொக்குமிரத்தம்போனீர்மூலையுண்ணுகண்சற்றும்விழிக்கொட்டாது, அறிந்தரிசிமாவாலேபாவைசெய்தலர்சூட்டிக்கந்தமொடுதூபதீபம், சிறந்தபொரிபொரிநீருமூரினிற்கீழ்த்திசையிற்பூமியில்வைக்கத்தெளிந்துபோமே. (நுசூ)

## முதலாவது மாதம்.

### வேறு.

தெளிந்ததோரொன்றுந்திங்கட்சேர்ந்திடுங்கபாலிப்பேய்தான்
குளிர்ந்துபல்சேட்டைபண்ணுங்கூசினின்றழுதுகத்தும்
கிளர்ந்தமண்பாவைசெய்துகேடில்பாற்பிண்ணுக்காக்கி
வளர்ந்தமண்ணகலில்சேர்த்துவைத்துகாற்சந்தியோடே. (நுஎ)

## உ-வது மாதம்.

சந்திசெய்யிரண்டாந்திங்கள்தன்னிலேயரக்கியென்பாள்
வந்துசெங்கரப்பான்செய்வள்வறுபொறியெள்ளிலோடு
மூந்துநல்லெண்ணெய்கூட்டிமூடிமண்ணகலிலிட்டுச்
சந்தியிலூர்வடக்கில்தலைப்பெயர்கூவிவையே. (நுஅ)

## ஈ-வது மாதம்.

வையமேல்மூன்றுந்திங்கள்மருவுவள்படச்சுருக்கி
மெய்யும்வாய்வறளும்வாந்திவீறிடுஞ்சீதம்போக்குந்
துய்யவெள்ளாட்டுப்பாலுஞ்சோறும்வெண்பொரிநீரோடுஞ்
செய்யமாப்பாவைசெய்துசெவ்வலரிப்பூச்சூட்டே. (ருசூ)

## உ-வது மாதம்.

சூட்டியேதெற்குத்திக்கிற்சூழ்ந்தநாற்சந்திவைக்க
கோட்டிளமூலையாயேகுங்குலவியநாலாமாத
காட்டியதிவந்திப்பேய்தான்கனன்றழுங்குழியுமுச்சி
யூட்டியமூலையுண்ணுதுவிழிகுளிர்ந்துறுமுந்தானே. (சூ0)

தானதுமாவாற்பாவையிரண்டுசெய்தகுமோர்க்கூழுங்
கூனல்மண்ணகலிலிட்டுக்குறிஞ்சாப்பூச்சூடிகோழி
ஆனதோர்பெலியுஞ்செய்துவந்தியின்மேற்குதிக்கில்
தேனலாகுழலாய்வைக்கத்தீர்ந்துபோஞ்செய்துகாணே. (சூக)

## ரு-வது மாதம்.

காணவேயைந்திற்காந்தகிப்பேயுறுமனங்கலங்கி
யூணிலேமூலையுண்ணுதுவிழிசிவந்துதிரஞ்சீதங்
காணிடச்சீறும்பாலைக்கக்கியேமிடுக்குஞ்செய்யுஞ்
சாணில்மாப்பாவைசெய்துசமைத்திடுபாலுஞ்சோறே. (சூஉ)

சோறுசெய்பாகற்கீரைசுண்டிமண்கலத்திலிட்டு
நாறிடுவெண்பூச்சூடிநற்பெலிகோழிமூட்டி
கூறியவந்திப்போதிற்குடதிசைவைத்தாற்றீரும்
வீறியவாரும்திங்கள்வெங்கருமூருக்கிதானே. (சூங)

## ரூ-வது மாதம்.

மூறுக்கிமெய்கருக்குங்காயமுதிர்சிரங்காகுங்கக்கும்
வறட்சையாய்த்தாகஞ்செய்யுமலர்க்கணீர்சொருகிக்காட்டுங்
குறித்தமண்பாவைசெய்துகூறியவுளுத்தஞ்சோறும்
வெறித்தும்பைமலரைச்சூட்டிவியன்றெற்குதிசையிற்போடே. (சூச)

எ-வது மாதம்.

திசையிலுத்ராபதிப்பேய்சேர்ந்திடுமேழாந்திங்கள்
வசமுடன்மூலையுண்ணுதுவரக்ஷியாயழுதுகத்தும்
பசையில்மாப்பாவைபண்ணிபகரன்னந்தூதுளங்காய்
நசையிலேக்கறியாவாரைநறுமலர்சூட்டிக்கொள்ளே. (சுஙு)

அ-வது மாதம்.

கொள்ளவேதவிட்டிலுலேகொழுக்கட்டைசெய்துக்கொண்டு
மெள்ளவேபடைத்துச்சுற்றிவியனந்திமாலைதன்னில்
வுள்ளநாற்சந்தில்வைக்கவோடிடுமெட்டாந்திங்கள்
விள்ளருமழகிப்பேயும்விருப்பொடுசேருந்தானே. (சுசு)

சேருமேமூட்டைவிண்டசிலம்போற்கழியும்வேம்பும்
வீரெனக்கதறுக்தொந்திவெளுத்திடுங்குழியுமுச்சி
பாரினிற்றவிட்டுப்பாவைபாற்கறிசோறும்வெண்ணெய்
வாருபேய்தூமட்டிக்கீரைவளர்காளிகோட்டத்தேற்றே. (சுஎ)

கூ-வது மாதம்.

எற்றியநவமாந்திங்களேரச்சங்கபாலியென்பாள்
சீற்றபல்சேட்டைசெப்புஞ்சேர்ந்திடுங்கோழைமெத்த
போற்றுமாப்பாவையப்பம்புசழ்சாகப்பாற்சோற்றோடு
தோற்றியேழாஞ்சந்திவைத்திடத்தொலந்துபோமே. (சுஅ)

கo-வது மாதம்.

தொலையவேபத்தாந்திங்கள்தோன்றுநற்சிங்கியென்பாள்
மலம்விடுஞ்சலதோஷம்போல்வருங்கண்ணேவிழிக்கொட்டாது
பலபஞ்சவண்ணச்சோறும்பழுபாகற்காய்விட்சிப்பூ
வுலவியமேற்சுத்திக்கிலுகந்துவையோடிப்போமே. (சுசூ)

கக-வது மாதம்.

ஒடியபத்தோடொன்றிலுத்திரமாகாளிப்பேய்
நாடியகுசும்பாபூப்போனயந்துசீதத்தைப்போக்குஞ்
சூடியகரியாற்பாவைசொல்லாவின்றயிருஞ்சேர்த்து
வாடைகாத்திகைப்பூச்சூடிமாலையிற்சுடலைவையே. (எo)

### கஉ-வது மாதம்.

வைத்தவீராறு திங்கண்மருவுஞ்சோமுறுக்கியென்பாள்
மெத்தவுஞ்சிரங்குவீக்கம்விழிசுழற்செய்யுஞ்சீறு
மூத்தியமஞ்சட்பாவைமுதிர்கருங்குருவைச்சோறு
மைத்திசழ்கொன்றைப்பூவும்வளர்கருவாடுங்கொண்டே. (எச)

கொண்டதையுச்சிப்போதிற்கோழியைப்பலியுஞ்செய்து
மண்டியகாளிகோட்டம்வைத்திடமாய்ந்துபோகுங்
கெண்டையங்கண்ணுயிப்பால்கிளிமொழிகுதலைச்செவ்வாய்த்
திண்டாதவழும்பெண்ணின்சிசுக்குணஞ்செப்பக்கேளே. (எஉ)

### க-வது மாதம். (பெண்பிறந்த.)

செப்பியதிங்களொன்றிலாரணிப்பேய்தாஞ்சேரும்
வெப்பமுங்கழிச்சலுண்டாம்விளக்கைகந்துங்கந்தஞ்செம்பூ
வொப்புறமாவாற்பாவையுளுத்தஞ்சோறகலிலிட்டுச்
செப்புநாற்சந்திவைக்கத்தீர்ந்துபோந்தெரிவைகல்லாய். (எங)

### வேறு.

### உ-வது மாதம். (பெண்பிறந்த.)

நல்லாயிரண்டிற்கொதியலகைநமன்போற்சிரசுதானலைக்கும்
பொல்லாச்சிதம்வாந்தியுண்டாம்பொரிபோற்சிரங்குவெடித்திடுமெய்
யெல்லாமிதற்குமாபாவையுளுத்தஞ்சோறெழிலடைகந்தஞ்
சில்லாமகலிலெருக்கிலைவைத்தேளூற்சந்திதெரிந்திடுவாய். (எச)

### ங-வது மாதம். (பெண்பிறந்த.)

தெரிந்தேமூன்றுந்திங்கள்தனிற்சேருங்காளிவயிறுவிடும்
பரிந்துமுறுக்குங்காயுமுடல்பகர்மதுசோறகருங்கோழி
புரிந்தகொன்றைதும்பைநறும்பூவைச்சூட்டிமாப்பாவை
விரிந்தசந்திதனில்வைக்கமேவாதுடனேபறந்திடுமே. (எரு)

### சு-வது மாதம். (பெண்பிறந்த.)

பறந்தநான்காந்திங்கடனிற்பகரும்புலனென்றிடுமலகை
சிறந்துமூர்ச்சையெதிரெடுக்குஞ்சிரமுங்குழியும்வெறிப்பார்வை
துறந்தவுளுத்தஞ்சோறப்பஞ்சொல்லுமெள்ளும்பொரியிறைச்சி
யறிந்தேகோழிப்பெலியூட்டியகன்றமயானத்திடைசெலுத்தே. (எசு)

### ரு-வது மாதம். (பெண்பிறந்த.)

செலுத்துமைந்திற்காமுனிவன்சேரிற்றலைகுழிவயிறுவிடும்
வலுத்துக்காயுமுடலெங்கும்மாற்றவுளுத்தஞ்சோறப்பம்
பலிக்குநாற்சந்தியில்வைக்கப்பறந்துபோகுமிருமூன்றிற்
சலிக்காதடருஞ்சாமுண்டிதயங்கும்விழியைச்சொருகிடுமே. (எஎ)

### சூ-வது மாதம். (பெண்பிறந்த.)

இடுமேவயிறுபொருமிப்பாலெடுக்குமாவுமிளநீருந்
திடமாங்கந்தமோட்டில்வைத்துச்செயமாம்பிடாரியகத்திலிடே
விடமாமிருளன்யேழினிலேவெதும்புமுலையையுண்ணது
அடல்சேர்மூர்ச்சைதாகமுண்டாமதற்குப்பெலியிங்கறைகுவனே. (எஅ)

### எ-வது மாதம். (பெண்பிறந்த.)

அறைவேனெய்யின்மாப்பிசைந்தைந்துகறிசோறுடுகந்தம்
நிறையவகலில்வைத்தெடுத்துநிகழுங்காளிக்கோட்டத்தில்
முறையாய்வைக்கத்தீர்ந்துவிடுமுதியவெட்டாந்திங்களிலே
நறைசேர்நாரசிங்கமெனுநாமத்தலகைசேர்ந்திடுமே. (எசு)

### அ-வது மாதம். (பெண்பிறந்த.)

சேர்ந்துகழிந்துமூர்ச்சையுண்டாஞ்சீறியழுதுவயிறப்பும்
பாந்தமாவாலெருமைசெய்துபகர்சந்தனம்பூவகலிலிட்டுச்
சாந்தமாலதனிலீமந்தன்னில்வைக்கத்தணிந்துவிடும்
வார்ந்தமுலையாயொன்பதிலேமகாமுனியென்பான்வந்திடுமே. (அ0)

### கூ-வது மாதம். (பெண்பிறந்த.)

வந்துபலவாம்விதஞ்செய்யும்வயிறுபோகுங்காற்குளிருங்
கந்தந்தெளித்தைந்துவகைக்கறிசோர்சோறும்பூவுடனே
முந்தவகலிலிவையமைத்துமுறையாய்மாலைப்போதினிலே
விந்தையுடன்சந்தியில்வைத்தால்வெகுண்டுபோகுங்கண்டீரே. (அக)

### க0-வது மாதம்.(பெண்பிறந்த.)

கண்டீர்பத்தாந்திங்கடனிற்கனத்தவாதிபாலனென்பான்
மிண்டாய்ச்சேரும்வயிறுவிடுமெத்தச்சிரசுவலியுண்டாந்
துண்டாய்பற்பலவிதஞ்செய்யுஞ்சோற்றிலைந்துவகையுடனே
தண்டார்கந்தமலர்தூவித்தனித்துநாற்சந்தியிற்போடே. (அஉ)

### கக-வது மாதம். (பெண்பிறந்த.)

போடும்பதிஞென்றுமாதம்புகழும்விதியென்பாள்சேரும்
வாடுமுகமும்கண்பிசையும்வலிக்குந்தலையைசாந்திசொல்வே
ஞேடும்நெய்தேன்கலந்துபிண்ணுக்குடனேகறியுமகலிலிட்டு
கூடுங்கந்தமந்தியிலேகொடியசுடலேதனில்வைப்பீர். (அக)

### கஉ-வது மாதம். (பெண்பிறந்த.)

வைப்பீர்பனிரெண்டாமாதம்வளரும்வீரன்ருன்சேரும்
மெய்பாய்க்கண்ணேவிழியாதுமிகுந்துபாலைக்குடியாது
ஒப்பாங்கோழிசிவந்தகறியுரைக்கும்பஞ்சவண்ணடிசிற்
செப்பாங்கந்தமகலிலிட்டுச்சீராய்ச்சந்திதனிற்சேரே. (அச)

### போது.

சேரும்பெண்ணுங்குழவிகட்குச்செப்புமாதமுறையுரைத்தோம்
வாருங்கச்சைமூலமாதேவளருமாண்டின்விதியதனைப்
பாரிலுரைப்பேனுண்பெணலிபகருமூன்றுவிதச்சேய்க்குஞ்
சேருமலகைதனைவேதத்திறத்தாலுரைப்போந்திண்ணமிதே. (அடு)

### க-வது வருஷம்.

திண்ணமுதலாமாண்டதனிற்சேருமலகனெனும்பேய்தான்
வண்ணம்வேருயுடல்வெதும்பும்வயிறுங்கழியுநடுக்குண்டாம்
பண்ணவிதற்குப்பலிகேளாய்பகருமுளுத்தஞ்சோறுடனே
வெண்ணெய்க்கட்டியிலக்கறியும்வேண்டிப்பிடாரியகத்தில்வையே. (அசு)

### உ-வது வருஷம்.

அகத்துமிரண்டாமாண்டதனிலணிகிவிடுங்கேசருவனென்பான்
பகைத்துவெதும்புமெதிரெடுக்கும்பலகாலமூநீரிறங்கிவிடும்
வகுத்தமாவாற்பாவைசெய்துவளமாம்பாற்சோறும்பருப்புந்
தொகுத்தவப்பம்பொரிபொறிநீர்சுடலேதனின்மாலையிலேற்றே. (அஎ)

### ரு-வது வருஷம்.

ஏற்றவேம்பினிலேகுமிழினிலையுங்காச்சிச்சலமெடுத்து
வாய்த்தகுழவிதனைக்குளிக்கவார்த்தாற்றீருமூன்றுண்டில்
தேற்றுஞ்சோமக்கன்னியென்பான்சேர்ந்துவயிறுகழிச்சலுடன்
சாற்றுமுடம்புநடுக்கிமுலேதனையுண்ணுமற்புரண்டிடுமே. (அஅ)

## ச-வது வருஷம்.

இடைவெண்சோறுபருப்புச்சோறிதமாந்தயிரும்பொரிபொறிநீ
ரடைகந்தமதாற்றூபமுடனறிந்துதீபஞ்சந்தனமும்
நடைநொங்கூறின்கிழக்கில்வைக்கநடுங்கியோடும்நான்ங்காண்டிற்
கடுஞ்செம்பத்திரகாளியென்பாள்கலந்தாற்றேகம்வுலர்த்திடுமே. (அசு)

உலர்த்திப்பயந்தமயலாகியொடுங்கக்கடிக்கும்பல்லதனை
நிலத்தில்நிணம்போல்மலங்கழியும்நேரிற்சுழலும்விழிபெலிகேள்
புலர்த்துமாவாலுறச்செய்துபொங்கற்பருப்புங்கருத்தடிசில்
அலர்த்தபொரியும்பொறிநீருமாலங்காயுங்காளியில்லே. (கூ0)

## ரு-வது வருஷம்.

இல்லாமைந்தாமாண்டதனிலெய்தும்வெண்டாவுளியென்பாள்
நல்லாய்வெதும்பிப்பற்கடிக்கும்நற்றூய்மூலையையுண்ணது
பொல்லாவயிறுபேதித்துப்பொருமுந்தேகமுலர்ந்துவிடும்
வல்லார்தனத்தாயிதற்குபெலிமாவின்பாவைசெம்பூவே. (கூக)

## சூ-வது வருஷம்.

பூவுஞ்சூட்டிச்சந்தனமும்பொரியும்பொறிநீரொட்டியப்ப
மாவின்பாற்சோறும்பருப்பினடிசிற்கந்ததீபதூபம்
மேவுமாலதனில்வைக்கவெகுண்டுபோகுமாரூண்டில்
தாவுங்கருடனெனுமலகைத்தூக்கிகாவைநீட்டிடுமே. (கூஉ)

நீட்டிச்சீறியழுதுகத்தும்நிதமுமுடம்பைவேர்த்துவிடுங்
கூட்டிமூலையையுண்ணதுகுதித்துவெருவிக்கண்விழிக்கும்
நாட்டில்மருந்துசண்பகப்பூநலஞ்சேர்வசம்புபெருங்காயம்
வீட்டின்மிளகுமிவையரைத்துமேலிற்பூசிபெலிகேளே. (கூங)

கேளாய்பஞ்சவண்ணடியிற்கெந்தந்தூபதீபமுடன்
தூளாம்பொயும்பொறிநீருஞ்சூழவகலிலிவையமைத்து
நாளாயூரின்கிழக்கில்வைத்துநறுவெண்கோழிபெலிகொடுத்தால்
வாளாவிழியாய்தீர்ந்துவிடுமற்றவாண்டின்வகைகேளே. (கூச)

## எ-வது வருஷம்.

வகையாலேழிலெமதூதியென்பாள்வந்துசெவியடைக்கும்
பகையாய்ச்சுரமுவைசூரியதாம்பகர்கொப்பளம்போற்காண்பிக்கும்
நகையாய்ச்செய்யுந்தும்பைமலர்நறுந்தாழம்பூமஞ்சளுடன்
துகையாயகலில்மூன்றுதினஞ்சொல்லும்பிடாரிகோவிலிடே. (கூடு)

### அ-வது வருஷம்.

இடவேயெட்டாமாண்ட தனிலெய்துந் திருதுமனெனும்பேய்தான்
அடவேநீராற்றள்ளிவைக்குமஸ்த்திமுறிந்தாற்போனடக்கும்
வடிமாவாலேபாவைசெய்துவளர்நெய்ச்சோறும்பாற்சோறுந்
திடமாமகலில்வைத்தவள்பேர்செப்பிச்சந்திதனிற்போடே. (கூசு)

### கூ-வது வருஷம்.

தனியேநவமாமாண்டதனிற்சாருங்காளியென்பவள்தான்
நனியாய்முறுக்கும்விஷந்தீண்டும்நாடிப்பார்க்குந்தெளிந்திருக்கு
மினிநற்சோறுங்கத்தரிக்காயெழில"ச்சிவந்தபாவைசெய்து
கனியுங்கந்தமகலிலிட்டுக்கடகவைமாமரத்தடியே. (கூஎ)

### கo-வது வருஷம்.

அடியார்பத்தாமாண்டதனிலடரும்பவனகனெனும்பேய்தான்
துடியாய்க்கைகால்விருவிருக்குஞ்சோம்பலருசிநித்திரையாம்
படியாங்குவைநன்னெற்சோறும்பழமுஞ்சிவந்தமலரிறைச்சி
யடருங்கருணைமூலமுடனகலில்வடக்குத்திசையமர்த்தே. (கூஅ)

### கக-வது வருஷம்.

அமர்த்துமேகாதசமாண்டிலணுகுந்திருவினெனும்பேய்தா
னமர்த்துக்காயுங்கழிச்சலுண்டாய்நடுக்குந்தயிருநல்லடிசில்
சமைத்துவாட்டினிறைச்சியிவைதானேயகலில்மாலயிலே
கமழ்த்துங்குழந்தைமுதுகுபுறங்காட்டிவைக்கக்கழிந்திடுமே. (கூகூ)

### கஉ-வது வருஷம்.

கழிந்தபனிரெண்டாமாண்டிற்கலக்குமைப்பசியாமலகை
பிழிந்துவெதும்புமந்நற்சோறும்பெரியவிறைச்சிகருவாடுங்
குழிந்தவகலில்மாலயிலேகுமரிகாளிகோட்டமிடி
லழிந்துபோகும்பதின்மூன்றுமாண்டிற்கலதியெனும்பேய்கேள். (கoo)

### கஙூ-வது வருஷம்.

பேய்தான்சேர்ந்துகனவரகப்பிதற்றும்வெருவுமுடம்புலரும்
தாய்தாயுடம்புவெதும்பிவிடுஞ்சொல்லுமெண்ணெய்ப்பிண்ணுக்கு
தோயுங்கருப்புக்கட்டியுடன்றுய்யமேதித்தயிர்கூட்டிக்
காயுஞ்சுடலைமாலைதனிற்காட்டிபூசைசெய்துவையே. (கoக)

## வைத்தியராஜ பாலவாகடம்
## மூற்றிற்று.

# வைத்தியராஜ பாலவாகட அரும்பதவகாதி.

அ.

அடிகுளிர்ந்திடல்-கால்சில்லிடல்
அண்டம்-கோழிமுட்டை
அயக்குச்சாறு - அரைகாற்படிச்சாறு [காலேவீசஞ்சேர்
அரம்பைக்கனி-வாழைப்பழம்
அலகை-சில்லரைதேவதை

ஆ.

ஆமலகம்-நெல்லிமுள்ளி
ஆமையின் பற்பம்-ஆமையோட்டின் [பற்பம்
ஆரணம்-ஆயுள்வேதம்
ஆனனம்-முகம்

இ.

இருகரந்தை - சிவகரந்தை, விஷ்ணு கரந்தை [டை
இருகழஞ்சு - இரண்டரை விராகனெ
இருநிஷ்கம்-இரண்டுவிராகனெடை
இறங்கு-ஒருவிதச்சோளம்
இன்பூறல்-இம்புரூவேர், சாயவேர்

ஈ.

ஈருள்ளி-வெண்காயம்

உ.

உதரம்-வயிறு
உத்தாமணி-வேலிப்பருத்தி

ஐ.

ஐயதார்த்தம்-கபவஸ்துகள்

ஓ.

ஓர்திங்கள்-ஒருமாதம்

க.

கணம்-அரிசிதிப்பிலி பாலரையுலர்த் [து ஒருவிதநோய்
கண்டங்காலி-கண்டங்கத்திரி
கமடபற்பம்-ஆமையோட்டின்பற்பம்
கருஞ்சீரி-கருஞ்சீரகம்
களிரடிபின்னகம் - யானைப் பின்கால் [நகம்

கா.

கார்த்ததுளசி-கருந்துளசி

கு.

குக்குடத்தாவாரை-கோழியாவாரை

கொ.

கொட்டைநெய் - சிற்றாமணக்கெண் [ணெய்

கோ.

கோமதம்-கோரோசனை

சா.

சாதியாடு-வெள்ளாடு

சி.

சிறுப்புத்தகர்-செம்மறியாடு
சின்னி-சிறுசின்னி

சீ.

சீரி-நற்சீரகம்

செ.

செம்பூ-சிவந்தபுஷ்பம்

தா.

தான்றி-தான்றிக்காய்

தி.

திராட்சக்கனி-கொடிமுந்திரிப்பழம்
திரிபலை - கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி

தோ.

தோயப்பசை-சலவிரோதம்

ந.

நவநீதம்-வெண்ணெய்

நி.

நிதம்பம்-பெண்குறி
நிம்பநெய்-வேப்பெண்ணெய்

நீ.

நீலி-அவுரி

ப.

பசுமலர்-கருப்பை
பச்சை-பச்சிலை
பல்குணம்-பலவிதச்செய்கை

பி.

பிடகர்-வைத்தியர்

பொ.

பொரிநீர்-சாராயம்
பொறி-நெற்பொரி

மா.

மாசி-மாசிப்பத்திரி
மாந்துதல்-குடித்தல்

மி.

மிசிரி-சாலாமிசிரி
மிடறு-தொண்டை

மு.

முத்தக்காசு-கோரைக்கிழங்கு

மே.

மேதித்தயிர்-எருமைத்தயிர்
மேனி-குப்பைமேனி

மோ.

மோதுகடுக்காய்-கடுக்காய்த்தோல்

ரோ.

ரோணி-கடுகுரோகணி

வ.

வசம்பிருந்தை-வசம்புசுட்டகரி
வச்சிரவல்லி-பிரண்டை
வண்டுணுமலர்-சண்பகப்பூ
வயின்-வயிறு
வல்லிசம்-மிளகு
வழுக்கை-பிரமியவழுக்கை
வனசப்பத்திரம்-தாமரையிலை
வனசகந்தம்-தாமரைக்கிழங்கு

வி.

விளங்கம்-வாய்விளங்கம்

வெ.

வெண்தகர்-வெள்ளாடு

வே.

வேர்க்கொம்பு-சுக்கு

# விளம்பரம்.

## யூனனிவைத்திய தாதுவிர்த்தி போதினியும், இராஜ அவுஷதசாலையும்.

இந்நூல் முதற்பாகமென்றும் இரண்டாம்பாகமென்றும் இருபாகங்களாக வகுக்கப்பட்டுத் தனித்தனி யிரண்டு வாலியங்களாகப் பிரசுரிக்கப்பட்டுத் தமிழிலும் தெலுங்கிலும் வழங்கிவருகின்றது. இஃது இவ்விந்தியா முழுதிலும், இதற்கடுத்தபிரதேசங்களிலும், இலங்கை, சிங்கப்பூர், மோரீஸ் முதலிய தீவாந்தரங்களிலும் யாவராலும் வழங்கப்படுகிறபடியால் முன்னமே அநேகமாயிரம் பிரதிகள் செலவாகி யிப்போது நான்காம் முறையிலும் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அநேகர் தாதுவின் தத்துவாதி விதிவிலக்குகளே யறியாமல் சாது புஷ்டிக்கென கண்ட அவடதங்களைச் சாப்பிட்டும், மற்றும் சிற்சில வகையிலும், பற்பல துன்பத்திற்குட்பட்டு பாம்பின் வாய்த் தேரையைப்போல் பரிதபிக்கின்றார்கள். அத்தகையினர்களும், மற்றவர்களும் அவ்வகைத் துன்பத்திற் காளாகாமல் தப்பித்துக்கொள்ளவும், அத்துன்பம் நேரிட்டிருந்தால் அதைத் தாங்களே நிவர்த்திசெய்து தாதுபுஷ்டி முதலிய இம்மைக்குறிய இன்பங்களையடைந்து வச்சிரதேகிகளாயிருக்கவும் இந்நூலில் ஜீவன் இன்னதென்றும், ஜீவாதாரங்கள் இன்ன இன்ன

வென்றும், அது இரத்தமும் இரத்தத்தாலாகிய சுக்கிலசோணிதமே என்றும், அவற்றைப் பரிபாலிக்கும் ஒழுக்கம், போஜன அவடதாதிகளும் இன்ன வென்றும் யாவரும் எளிதில் உணருமாறு மிகு பிரயாசையோடு அரபி, பார்ஸி, திராவிடம், இங்கிலீஷ் முதலிய பலபாஷா ஆயுள்வேத பண்டித சிரோன்மணிகளும், எம் முன்னோர்களும் அனுபவ யுக்தமாய்க் கைகண்டு தெளிந்தவற்றையே யானும் தேனீப்போல ஒவ்வொன்றையும் சுவைத்து எடுத்து ஒழுங்கு திரட்டி இனிய நடையில் எழுதியிருக்கின்றேன். பற்பல வகை தாது நஷ்டத்தை நீக்கி புஷ்டியைத்தரும் பலவகை அவடதங்களும், ஸ்திரீ புருடர்களின் இதரவியாதிகளுக்காம் பற்பல வேறு அவடதங்களும், இன்பத்தை யுண்டாக்கும் பற்பல சுகந்தமூறைகளும் ஆகிய இவற்றின் செய்பாக கைபாகமுறை பிசகாமல் செய்யும் மார்க்கங்களும் இதில்தெளி வாய் காண்பித்திருக்கிறேன். இதில் இலேமறை காய்போல் யாதேனும் ஒன் றிரண்டு புலப்படா திருப்பினும் இதற்குத்துணை கருவியாயுள்ள யூநானிவை த்தியதாதுவிர்த்தி போதினி தீறவுகோல் என்னும் நூலில் கரதலாமலகம் போல் நன்கு விளங்கும். முடிவில் இதில் சொல்லப்பட்டிருக்கும் ஒவ் வொரு முறைகளும் இதுவரையில் வெளியிடப்படாததும் கைகண்டதுமே யாதலாலும் யாவருக்கும் எச்சமயத்திலும் உத்தமுணையா யுதவியாதலாலும் யாவரிடத்தும் இக்கிரந்தம் இருக்கப்பட வேண்டுமென்பது ஆவசியகம். இந்நூலில் அடங்கிய விஷயங்களையும் இந்நூலில் சொல்லப்பட்ட ஔஷதாதி களைத் தாமே செய்தும் எம்மிடத்து விலைக்கு வாங்கியும் உண்டு பல பிராப் தியடைந்த சாதுக்கள் அநேகர் ஆனந்தபரவசராய் எமக்குக் கொடுத்துள்ள சற்சாக்ஷி பத்திரங்களை அவர்களுள் சிலரின் சாயாபடத்துடன் விபரமாய்த தனியே பிரசுரஞ்செய்திருக்கின்றேன். அதை யெம்மிடம் கடிதம் எழுதிப் பெற்று வாசிப்பவர்களுக்கு விசிதமாய் விளங்கும்.

## தமிழ் யூனி வைத்தீய தாதுவிர்த்தி போதினி.

| | | கைவிலைக்கு | வி. பி. போஸ்ட். |
|---|---|---|---|
| முதற்பாகம் பிரதி | க-க்கு | 1—5—0 | 1—9—0 |
| ஷ இரண்டாம்பாகம் | க-க்கு | 2—0—0 | 2—5—0 |
| ஷ தீறவுகோல் | க-க்கு | 0—10—0 | 0—13—0 |
| ஷ மூன்றும் ஏககாலத்தில் | | 3—15—0 | 4—6—0 |

மேற்படி புத்தகத்திற் சொல்லப்பட்டிருக்கிற யூநானி தனிச்சரக்கு களும் யோகமுறையான பாகங்களும் வேண்டிய கனவான்களுக்கு சொற்ப கமிஷனுடன் அனுப்பும்படியாக இராஜஅவுஷதசாலை என்னும்மருந்துஷா ப்பு அநேக கனவான்களின் வேண்டுகோளின்படி ஏற்படுத்தப்பட்டிருக்கி றது. இன்னும் இந்த ஷாப்பில் தாதுவிர்த்திக்காம் பற்பல அல்வாக்கள், திலாக்கள், பட்டிகள் முதலியவைகளும், இதரவியாதிகளுக்காக அவடதங்க ளும் மிகவும் விலைசரசமாய் விற்கப்படும். அவடதங்களின் ஜாபிதா வேண் டியவர்களுக்கு இலவசமாய் அனுப்பப்படும்.

மேற்கூறிய புத்தகங்களும், மருந்துகளும், மற்றவிவரங்களும் வேண் டியவர்கள் (சென்னை மாபூஸ்கான்தெவடி அப்பு மேஸ்திரீ தெருவில் 12-வது நம்பர் வீட்டில் அக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாகிபு) அவர்களி டத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

---